14.10.2015

தினமலர்

## இன்றைய வேளாண் செய்திகள்

### மணிச்சத்து உரம்

பயிர்களுக்குத் தேவையான முதன்மையான ஊட்டச்சத்துக்களில் மணிச்சத்து மிக மிக அவசியமானதாகும். மணிச்சத்தானது பயிர்களின் வேர் வளர்ச்சிக்கு அவசியமான ஒன்றாகும். அதோடு அல்லாமல் தாவரங்களின் செல் மூலப்பொருட்களான உட்கரு, பாஸ்போபுரோட்டீன், பாஸ்போலிப்பிட், மரபுப்பொருள் ஆகியவை உருவாவதற்கும் மணிச்சத்து இன்றியமையாததாகும். நமது மண்ணில் இடப்படும் மணிச்சத்து உரங்களில் சராசரியாக 80 சதவீதம் தாவரங்களுக்கு கிடைப்பதில்லை. மிக அரிதாக 20 சதவீதமே பயிர்களுக்கு கிடைக்கின்றது. இதற்கு பல வகையான காரணங்கள் இருந்தாலும், மண்ணின் கார அமிலத்தன்மை மிக முக்கியமான ஒன்றாகும். பொதுவாகவே மணிச்சத்து நடுநிலையான கார அமிலத்தன்மையிலேயே பயிர்களுக்கு கிடைக்கின்றது. சந்தையில் பல வகையான மணிச்சத்து உரங்கள் விவசாயிகளுக்கு கிடைக்கின்றது. அவற்றில் வியாபார ரீதியாக கிடைக்கக் கூடியது சூப்பர் பாஸ்பேட், டி.ஏ.பி., பாறை பாஸ்பேட் ஆகியவையாகும். இவை மூன்றுமே தாவரங்களுக்கு மணிச்சத்தை கொடுத்தாலும், இந்த உரங்களை மண்ணின் கார அமிலத்தன்மைக்கு ஏற்றவாறு இட்டால், தாவரங்களின் மணிச்சத்து பயன்படுத்தும் திறனை அதிகப்படுத்தலாம். இதற்காக மண்ணை மண் பரிசோதனை நிலையத்தில் கொடுத்து நன்கு பரிசோதித்து அதன் கார-அமிலத் தன்மைக்கு ஏற்றவாறு உரப் பரிந்துரையை மேற்கொள்ளலாம்.மண் அமில மண்ணாக இருந்தால் அதாவது கார-அமிலத் தன்மை 6.5க்கு குறைவாக இருந்தால் பாறை

பாஸ்பரஸ் எனப்படும் ராக்பாஸ்பேட் உரத்தை இடுவது மண் மற்றும் தாவரத்திற்கு உகந்ததாகும். ஏனென்றால் பாறை பாஸ்பரஸின் கரைதிறன் அமில மண்ணில் அதிகரிக்கப்படுவதே இதற்கு காரணமாகும். நடுநிலையான கார அமிலத்தன்மை அதாவது 6.5 - 7.5 உள்ள மண்ணிற்கு டி.ஏ.பி. எனப்படும் காம்ப்ளக்ஸ் உரம் உகந்ததாகும். மண் களர் மற்றும் உவர் தன்மையாக இருந்தால் அதாவது கார-அமிலத்தன்மை 7.5க்கு மேல் இருந்தால் சூப்பர் பாஸ்பேட் சிறந்த உரமாகும். விவசாயிகள் மேற்கூறியவாறு மணிச்சத்து உரங்களை மண்ணின் கார-அமிலத்தன்மைக்கு ஏற்றவாறு உபயோகித்தால் பயிர் உற்பத்தியை மேம்படுத்தி பயன்பெறலாம்.- **முனைவர் ம.மணிமாறன், உதவிப் பேராசிரியர் (மண்ணியல்)திண்டுக்கல். அலைபேசி : 98949 05722**

**காயோ கசப்பு... லாபமோ இனிப்பு....**



வெள்ளரி செடியை தரையில் படரவிடுவர். ஒட்டுரக வெள்ளரி செடியை கொடியில் வளரவிடும் பழக்கம் விவசாயிகளிடையே பரவி வருகிறது. இதன் மூலம் குறுகிய இடத்தில் அதிக செடிகளை வளர்க்க முடிகிறது. இதே பாணியில் திராட்சையை விளைவிப்பது போல் பந்தலில் பெரிய

பாகற்காய்களை விளைவிக்கிறார் விவசாயி கண்ணன்.இவர் மதுரை மாவட்டம் வாடிப்பட்டி அருகே குட்லாடம்பட்டியை சேர்ந்தவர். வாடிப்பட்டி பகுதியில் நெல், கரும்பு விவசாயம் அமோகம். எனினும் விவசாயி கண்ணன் மாற்று விவசாயமாக பந்தல் பாகற்காய் விவசாயத்தில் கவனம் செலுத்தி வருகிறார்.பந்தல் பாகற்காய் விவசாயம்... லாபம் எப்படி? என்பது குறித்து கண்ணன் கூறியதாவது: "யு.எஸ்.575' ஒட்டுரக பெரிய பாகற்காய் விதை 50 கிராம் ரூ.350. வறட்சியால் பட்டுப்போன தென்னை மரங்களை அகற்றி விட்டு 50 சென்ட் நிலத்தில் பந்தல் அமைத்து பெரிய பாகற்காய் விவசாயத்தில் ஈடுபட்டுள்ளேன். ரூ.18 ஆயிரம் செலவானது. தோட்டக்கலைத்துறை மூலம் ரூ.3000 மானியம் கிடைத்தது. சின்னப்பாகற்காய் உற்பத்தி குறைவாகவும், விலை அதிகமாகவும் இருக்கும். பெரிய பாகற்காயில் உற்பத்தி அதிகமாகவும், விலை குறைவாகவும் இருக்கும். இரண்டிலும் சமச்சீர் சத்துக்கள் உள்ளன. கூடுதலாகவோ, குறைவாகவோ இல்லை. கால்நடைகள் வளர்ப்பதால் அடி உரத்திற்கு பஞ்சமில்லை. கூடுதலாக காம்பளக்ஸ், பொட்டாஷ் உரம் வைக்க வேண்டும். காய் ஒன்று 350 முதல் 550 கிராம் வரை எடையுடன் வளர்கிறது. ஐந்து நாட்களுக்கு ஒருமுறை காய்கள் பறிப்போம். 30 கிலோ கொண்டது ஒரு சிப்பம். ஐந்து நாட்களுக்கு ஒரு முறை நான்கைந்து சிப்பம் எடையில் காய்கள் கிடைக்கும். கிலோ ரூ.20 விலையில் உள்ளது. அவ்வப்போது விலை கூடும். குறையும். பாகற்காயின் சுவை கசப்பு. காய்கள் மூலம் கிடைக்கும் வருமானம் இனிப்பாக உள்ளது என்றார். தொடர்புக்கு: 90957 30271.
**-கா.சுப்பிரமணியன், மதுரை.**

## *சின்ன சின்ன செய்திகள்*





**உளிக்கலப்பை**: உளிக்கலப்பை கொண்டு ஆழ உழவு செய்தல் விளைச்சலை அதிகப்படுத்த அத்தியாவசியமான உத்தி ஆகும். மானாவாரி பயிர்கள் இதனால் அதிக பலனை அடைகின்றன. இப்படி செய்வதால் கடினமான அடிமண் தகர்க்கப்பட்டு, மண்ணின் நீர் உறிஞ்சும் தன்மையும், நீர் சேமிப்புத்திறனும் அதிகரிக்கின்றன. இவ்வாறு திருத்தி அமைக்கப்பட்ட நிலத்தின் அடிப்பகுதியில் பயிர்களின் வேர் படர்ந்து வளர உதவுகிறது. எனவே பயிர்களின் வறட்சியைத் தாங்கும் தன்மையும், விளைச்சலும் அதிகப்படுத்தப்படுகின்றன.விரிவான ஆராய்ச்சிகளின் பயனாக குறைந்த இழுவிசை மற்றும் அதிக செயல் திறன் கொண்ட உளிக்கலப்பை வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கலப்பை 3 மி.மீ தகட்டினால் ஆன நீள் சதுர இரும்பு குழல்களால் ஆன சட்டத்தைக் கொண்டுள்ளது. இக்கலப்பையின் சட்டம் மிக நவீன உத்திகளுடன் கம்ப்யூட்டரின் உதவியுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. இக்கலப்பையை கொண்டு 40 செ.மீ. வரை ஆழ உழவு செய்யலாம். இக்கலப்பையை 35 முதல் 45 குதிரை திறன் கொண்ட டிராக்டரால் எளிதாக இயக்கலாம். இந்த உளிக்கலப்பையைக் கொண்டு உழவு செய்தால் எக்டருக்கு ரூ.265 செலவு ஆகும். தகவல்: அ.சுரேந்திரகுமார், வேளாண் இயந்திரங்கள் ஆராய்ச்சி மையம், த.வே.ப.கழகம், கோயம்புத்தூர்-641 003. தொலைபேசி: 0422 - 245 7576.**காட்டு கருவேல் மரங்கள்**: எந்த நிலத்திலும் வளரும் திறன் படைத்தவை. இதன் விதைகள் கால்நடைகளுக்கு குருணையால் கொடுத்தால் புரதச்சத்து கிடைக்கும். இம்மரங்கள் காற்றில் உள்ள ஈரத்தை உறிஞ்சி வளரும் தன்மை படைத்தவை. உரிய முறையில் வெட்டி வளர்த்தால் நல்ல வேலியாக

அமையும். மரங்கள் வேரூன்றி விட்டால் அழிப்பது கடினம். இம்மரத்தின் முட்கள் விஷமுள்ளவை. ஆறாத புண்ணை உண்டாக்கும். கரி சுட்டு விற்பனை செய்ய ஏற்றவை. வெட்ட வெட்ட மீண்டும் மீண்டும் வளரும் திறன் படைத்தவை. இம்மரத்தடியில் புல் பூண்டுகள் வளர்வது கிடையாது. காட்டு கருவேல் மரங்கள் அதிக கரியமில வாயுவை வெளியிட்டு சுற்றுச்சூழலை கெடுக்கின்றன. எனவே இம்மரங்களை ஒழிப்பது நன்மை ஏற்படுத்தும் என ஆய்வு தெரிவிக்கின்றது. மாமரம் கிளை முறிந்து விட்டால் வருத்தப்பட வேண்டியதில்லை. மிகுந்த மகிழ்ச்சி கொள்ளுங்கள் என்று வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த முன்னோடி மா விவசாய தி.அங்கமுத்து கூறுகிறார். அதாவது அந்த மரத்தில் ஒரு ரகத்தின் காய்கள் மட்டுமே கிடைத்திடும். இப்போது அந்த மரத்தில் நீங்கள் விரும்பும் 30 மா ரகங்களைக் கூட உருவாக்க முடியும். இதற்கு ஒட்டுக்கட்டும் தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. நர்சரி நடத்துபவர்களிடம் நம்முடைய தேவையைச் சொன்னால் மரத்தில் ஒட்டுக்கட்டிக் கொடுப்பார்கள். ஏற்கனவே வளர்ந்துள்ள நீலம், பேங்களூரா மரங்களை வெட்டி அகற்றாமல், அல்போன்சா, பங்கனப்பள்ளி எந்த ரகத்தை வேண்டுமானாலும் அவற்றில் ஒட்டுக்கட்டிக் கொள்ளலாம் என்கிறார் மா விவசாயி தி.அங்கமுத்து. தொடர்புக்கு: அலைபேசி : 97515 89280.**சோள தோசை:** தேவையான பொருட்கள்: வெள்ளைச்சோளம் 4 கப், முழு கருப்பு உளுந்து 1 கப், வெந்தயம் 1/4 தேக்கரண்டி, வெங்காயம் 1 பொடியாக நறுக்கியது, உப்பு தேவைக்கேற்ப, எண்ணெய் தேவைக்கேற்ப, இஞ்சித்துருவல் 1 தேக்கரண்டி, கறிவேப்பிலை சிறிதளவு.செய்முறை : வெள்ளச்சோளம், கருப்பு உளுந்து இரண்டையும் கழுவி 4 மணி நேரம் ஊற விடவும். வெந்தயம் சேர்த்து ஊற விடவும். பின் இட்லி மாவு அரைப்பது போல் அரைத்து, உப்பு சேர்த்து கலக்கி, 8 மணி நேரம் புளிக்க விட வேண்டும். தோசை ஊற்று முன் பொடியாக நறுக்கிய வெங்காயம், இஞ்சித்துருவல்,

கறிவேப்பிலை சேர்த்து கலக்கி மெல்லிய தோசையாக இட்டு பரிமாறவும். எந்த சட்னியுடனும் சாப்பிடலாம். தகவல் : கிருஷ்ணகுமாரி ஜெயக்குமார், சென்னை.- **டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

### துவரை விலை உயர்வால் விவசாயிகளுக்கு லாபமா?

கலபுரகி: கடந்த, 10 ஆண்டுகளில் இல்லாத அளவில், துவரம் பருப்பு விலையேற்றம் கண்டிருந்தாலும், இதனால், விவசாயிகளுக்கு எவ்வித லாபமும் இல்லை என்பது தெரிய வந்துள்ளது. விவசாய உற்பத்தி வர்த்தக குழு - ஏ.பி.எம்.சி., தகவலின்படி, கடந்த சில வாரங்களுக்கு முன், குவின்டால் ஒன்றுக்கு, 8,000 ரூபாய்க்கு விற்கப்பட்ட நடுத்தர ரக துவரம் பருப்பு, 10 ஆயிரம் ரூபாயாக உயர்ந்திருந்தது. உயர்ரக துவரம் பருப்பு குவின்டால், 11 ஆயிரத்தில் இருந்து, 14 ஆயிரம் ரூபாயாக உயர்ந்திருந்தது. தற்போது, அதே நடுத்தர ரக துவரம் பருப்பு குவின்டால், 12 ஆயிரம் ரூபாயாகவும், உயர்ந்த ரக துவரம் பருப்பு குவின்டால், 18 ஆயிரம் ரூபாயாகவும் உயர்ந்துள்ளது.அரசு இறக்குமதி செய்தாலொழிய, துவரம் பருப்பு விலை குறைய வாய்ப்பில்லை என்று தெரிகிறது.விவசாயிகள் டோக்ரி பெலகாரர சங்க தலைவர் பசவராஜ்: நடுத்தர, உயர்ரக துவரம் பருப்பு வகைகளை இருப்பு வைக்க இடவசதி இல்லாததால், கடந்த டிசம்பர், மார்ச்சில், குவின்டால் முறையே, 4,500 முதல், 6,000 ரூபாய்க்கு விவசாயிகள் விற்றுவிட்டனர். ஆகஸ்ட் மாதத்தில் கூட, 7,500 ரூபாய்க்கு தான் விலை போனது.மழை பற்றாக்குறையினால், இந்தாண்டு துவரை உற்பத்தி, 20 முதல், 40 சதவீதம் குறைய வாய்ப்புண்டு என்பதை தெரிந்து கொண்ட வர்த்த கர்களும், இடைத்தரகர்களும் விலையை உயர்த்தி யுள்ளனர். இதனால், விவசாயிகளுக்கு எவ்வித லாபமும் இல்லை.கர்நாடக பிராந்திய விவசாயிகள் சங்க தலைவர் மாருதி மண்பாடே: பருப்பு மற்றும் தானியங்களை பதுக்கி வைத்திருக்கும்

வியாபாரிகளின் கிட்டங்கி களை, உணவு மற்றும் பொது வினியோக துறை அதிகாரிகள் இதுவரை சோதனையிடவில்லை. விவசாயிகளிடமிருந்து நேரடியாக கொள்முதல் செய்து, பொது வினியோக துறை மூலமாக விற்பனை செய்யும் முறையை அமல்படுத்தும்படி, பல ஆண்டுகளாக வற்புறுத்தி வருகிறோம். இதன் மூலம் மட்டுமே விவசாயிகள் லாபமடைய முடியும். பருப்பு மில் அதிபர்கள் சங்க முன்னாள் தலைவர் சிவசரணப்பா நிக்குடிகி: துவரை அறுவடை செய்தவுடன் உடனடியாக வர்த்தகர்களும், இடைத்தரகர்களும் விவசாயிகளை அணுகி, குறிப்பிட்ட விலையை கூறி கொள்முதல் செய்துவிடுகின்றனர். உடனடியாக பணம் தேவைப்படுவ தால், விவசாயிகளும் கொடுத்து விடுகின்றனர்.இடைத்தரகர்களும், வர்த்தகர்களும் செயற்கையான பற்றாக்குறையை உருவாக்கி, விலையை ஏற்றி விற்பனை செய்கின்றனர்.பருப்பு வியாபாரிகள்: பருப்பு விலை உயர்வது தேசிய சந்தை விலையை பொறுத்தது. நாடு முழுவதும் துவரம் பருப்பு விலை உயர்ந்துள்ளது. இந்த விலை உயர்வுக்கு வர்த்தகர்களை எப்படி காரணம் காட்டலாம்.

### தாண்டிக்குடியில் 'பெரிசிமோன்' பழம்



தாண்டிக்குடி:ஆஸ்திரேலியாவை பிறப்பிடமாக கொண்ட 'பெரிசிமோன்' பழம் குறித்து தாண்டிக்குடியில் ஆய்வு நடக்கிறது.ஆஸ்திரேலியா மற்றும் அமெரிக்காவில் பெரிசிமோன் பழங்கள் அதிகளவு விளைச்சல் காண்கிறது.இந்த வகை பழச்செடியைஆங்கிலேயர் ஒருவர் நீலகிரி குன்னூர் பகுதியில் நடவு செய்துள்ளார்.அவை கடந்த சில ஆண்டுகளாக மகசூல் காண்கிறது. சாகுபடி மற்றும் கன்று உற்பத்தி, விதை நேர்த்தி குறித்து வழிமுறை அறியாததால் சாகுபடி பரப்பை அதிகரிக்க முடியவில்லை. இப்பழத்தில் பெக்டின் அமிலம் , ஹார்மோன், விட்டமின் நிறைந்துள்ளது.

ரத்தத்தில் சர்க்கரையை கட்டுப்படுத்துகிறது. தக்காளி போன்ற இப்பழத்தின் காய்கள் மஞ்சள் நிறத்திலும், பழங்கள் சிவப்பு நிறத்திலும் தோற்றமளிக்கும்.

குறிப்பாக இதய நோயை குணப்படுத்தும் ஆற்றல், அது வலுப்பெறவும் இப்பழங்கள் பயன்படுகின்றனவாம்.காபி ஆராய்ச்சி நிலைய விஞ்ஞானி சவுந்தரராஜன் கூறியதாவது: தாண்டிக்குடியில் நிலவும் சீதோஷ்ண நிலைக்கு பெரிசிமோன் பழச் செடிகள் நன்கு வளரும். காபிக்கு மத்தியில் ஊடுபயிராக பயிரிடுவது குறித்தும், இக்கன்றுகளின் உற்பத்தியை குச்சி மற்றும் விதை மூலம் செய்வது குறித்தும் ஆய்வுகள்

நடந்து

வருகிறது.இந்தியாவில் நீலகிரி பகுதியில் மட்டுமே சொற்ப எண்ணிக்கையில் இம்மரங்கள் உள்ளன. அரிதான பெரிசிமோன் நடவு செய்த ஏழாவது ஆண்டில் மகசூலுக்கு தயாராகும், என்றார். இதன் உற்பத்தி பரப்பை அதிகரிக்க தோட்டக்கலைத்துறை மற்றும் வேளாண் ஆராய்ச்சி நிலையங்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## மீனவர் நிவாரணம்: ரூ.35 கோடி ஒதுக்கீடு

சென்னை: தேசிய மீனவர் சேமிப்பு மற்றும் நிவாரண திட்டத்தின் கீழ், கடல் மீனவர்களுக்கு நிவாரண தொகை வழங்க, மாநில அரசின் பங்குத் தொகையாக, 35 கோடி ரூபாயை தமிழக அரசு ஒதுக்கியுள்ளது.மத்திய, மாநில அரசுகளின் சமவிகித நிதியுதவி பங்களிப்போடு, ஒவ்வொரு ஆண்டும், மீன்பிடி தடைக் காலத்தில், கடல் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படுகிறது. இந்த திட்டத்தின் கீழ் மாதம், 100 ரூபாய் வீதம், ஒன்பது மாதங்களுக்கு, 900 ரூபாய் மீனவர்களிடம் இருந்து பங்குத் தொகை வசூலிக்கப்படும்.மத்திய, மாநில அரசுகளின் பங்குத் தொகையாக, தலா, 900 ரூபாய் சேர்த்து, 2,700 ரூபாய் மீனவர்களுக்கு நிவாரணம் வழங்கப்படும்.இந்த திட்டம் தமிழகத்தில், 10 கடலோர மாவட்டங்களில் செயல்படுத்தப்படுகிறது. கடந்த ஆண்டு, இரண்டு லட்சம் மீனவர்களுக்கு, 36 கோடி ரூபாய் நிவாரணம் வழங்கப்பட்டது.நடப்பு ஆண்டில் இந்த திட்டத்தில், இரண்டு லட்சம் மீனவர்கள் சேர்ந்துள்ளனர். அவர்களிடம் இருந்து, 17 கோடி ரூபாய் வசூலிக்கப்பட்டுள்ளது. மாநில அரசின் பங்காக, 35 கோடி ரூபாய் வழங்க தமிழக அரசு அனுமதி அளித்துள்ளது.

## தமிழக மீனவ பெண்ணுக்கு அமெரிக்க விருது



சென்னை:கடல் வள பாதுகாப்புக்காக, அமெரிக்க நாட்டின், 'சீகாலஜி' விருது, தமிழக மீனவப் பெண் லட்சுமி மூர்த்திக்கு கிடைத்துள்ளது. ராமநாதபுரம் மாவட்டம், பாம்பன் அருகேயுள்ள சின்னப் பாலம் கிராமத்தைச் சேர்ந்தவர் லட்சுமி மூர்த்தி, 45. மன்னார் வளைகுடா, தேசிய கடல் பூங்கா அருகில், கடல்பாசி அறுவடை செய்யும் தொழில் செய்கிறார்; ராமநாதபுரம் மீன்பிடி தொழிலாளர் சங்க நிர்வாகியாகவும் இருக்கிறார். கடல் மற்றும் கடற்கரை சுற்றுச் சூழலை பாதுகாக்க, இவர் தொடர்ந்து பல நடவடிக்கைகள் எடுத்து வந்தார். இதற்காக, அமெரிக்க நாட்டின், 'சீகாலஜி' என்ற கடல் வள பாதுகாப்பு ஆய்வு அமைப்பின், 'சிறந்த மகளிர் விருது' லட்சுமி மூர்த்திக்கு வழங்கப்பட்டுள்ளது.கடல் வள பாதுகாப்பு முயற்சியில், உலகம் முழுவதும் ஈடுபட்டுள்ள தனி நபர்களின் தகவல்களை சேகரித்த இந்த அமைப்பு, சர்வதேச அளவில், லட்சுமி மூர்த்தியை தேர்வு செய்துள்ளது.இந்த விருது வழங்கும் விழா, அமெரிக்காவின், கலிபோர்னியா மாகாணத்தில், கடந்த 8ம் தேதி நடந்தது. 'சீகாலஜி' அமைப்பின் நிறுவனர் பால் ஆலன் காக்சிடமிருந்து, லட்சுமி மூர்த்தி விருதை பெற்றுக் கொண்டார். விருதுடன், 65 லட்சம் ரூபாய் ரொக்கப் பரிசும் கிடைத்துள்ளது. நேற்று, சென்னை திரும்பிய அவரை, தேசிய மீனவர் பேரவை தலைவர் இளங்கோ உள்ளிட்ட, மீனவ சங்க நிர்வாகிகள் வரவேற்றனர்.விருது பெற்ற லட்சுமி மூர்த்தி கூறுகையில், "கடல் வளம், சுற்றுச்சூழல் பாதிக்காத வகையில்

ஆண்டுக்கு, இரண்டு மாத விடுப்பு விட்டும்; ஒரு வாரம் விட்டு ஒரு வாரம் கடல் பாசி எடுக்கிறோம். எனக்கு கிடைத்த இந்த அமெரிக்க விருது, தமிழக மீனவப் பெண்களுக்கு கிடைத்த உலக அங்கீகாரம்; மிகுந்த மகிழ்ச்சியாக உள்ளது," என்றார்.

## மழையால் நிரம்புகிறது பெரியாறு அணை

மதுரை:மதுரை, திண்டுக்கல், தேனியில் சில நாட்களாக மழை பெய்து வருவதால், அணைகளின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. அதிகபட்சமாக நேற்று முன்தினம் தேக்கடியில் க0.அ மி.மீ., மழை பதிவானது.\ மழையளவு( மி.மீ.,): மதுரை 1, இடையபட்டி 2.4, பெரியாறு 6.8, விரகனுார் 9.2.அணைகளின் நீர் வரத்து: பெரியாறு அணை உயரம் 152 அடி. நீர் மட்டம் 117.50 அடி. நீர் இருப்பு 2,12,177 மில்லியன் கனஅடி. நீர் வரத்து வினாடிக்கு 726 கன அடி. வெளியேற்றம் 518கன அடி. வைகை அணை உயரம் 71 அடி. நீர் மட்டம் 48.16அடி. நீர் இருப்பு 1,752 மில்லியன் கனஅடி. நீர் வரத்து வினாடிக்கு 454 கனஅடி. வெளியேற்றம் 60 கனஅடி. மஞ்சளாறு அணை உயரம் 57 அடி. நீர் மட்டம் 56.80 கனஅடி. நீர் இருப்பு 482..64 மில்லியன் கனஅடி. நீர் வரத்து வினாடிக்கு 392 கனஅடி. வெளியேற்றம் 392 கனஅடி. மருதாநதி அணை உயரம் 64 அடி. நீர் மட்டம் 61.25 கனஅடி. நீர் இருப்பு 170..500 மில்லியன் கனஅடி. நீர் வரத்து வினாடிக்கு 138 கனஅடி. வெளியேற்றம் 90 கனஅடி.

## மேட்டூர் அணையின் நீர்வரத்து அதிகரிப்பு

மேட்டூர் : மேட்டூர் அணையின் நீர்வரத்து, 4,668 கனஅடியிலிருந்து 8,456 கனஅடியாக அதிகரித்தது. மேட்டூர் அணையின் நீர்மட்டம் 68.55 அடியாகவும், நீர் இருப்பு 31.47 டி.எம்.சி.,யாகவும் உள்ளது. மேட்டூர் அணையிலிருந்து டெல்டா பாசனத்திற்காக வினாடிக்கு 10 ஆயிரம்

கனஅடி நீரும், அணையிலிருந்து கிழக்கு மற்றும் மேற்கு கால்வாய் பாசனத்திற்காக 500 கனஅடி நீரும் திறக்கப்படுகிறது.

## பெரியகுளம் அருகே கண்மாய் உடைந்தது: 100 ஏக்கர் பயிர்கள் சேதம்



பெரியகுளம்: பெரியகுளத்தில் அதிகாரிகுளத்தின் கரை உடைந்ததில் நுாறு ஏக்கர் நெற்பயிர்கள் சேதமடைந்தன.தேனி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. கல்லாறு பகுதியில் பெய்த மழையால், பெரியகுளம் கீழவடகரை மேலப்புரவு பகுதியில் உள்ள அதிகாரி கண்மாய் நேற்று முன்தினம் இரவு நிரம்பி விட்டது. நேற்று காலையில் கண்மாயின் கரை உடைந்து, தண்ணீர் வெளியேறியது.இதில் அப்பகுதியில் 100 ஏக்கருக்கு மேல் சாகுபடி செய்யப்பட்டிருந்த நெல்பயிர்கள், வாழை, தென்னை, மாங்கன்றுகள் உள்ளிட்ட பயிர்கள் சேதமடைந்தன. தென்னை, மா மரங்களுக்குதண்ணீர் பாய்ச்ச அமைக்கப்பட்டிருந்த சொட்டுநீர் பைப்புகளும் வெள்ளத்தில்அடித்துச்செல்லப்பட்டன.உதவி பொறியாளர் மல்லிகா தலைமையில், பொதுப்பணித்துறையினர் கண்மாய் கரை உடைப்பை சரி செய்யும் பணியில் ஈடுபட்டுள்ளனர். பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் பெரியகுளம், தாமரைக்குளம், பாப்பிபட்டி, மத்துவார், அதிகாரி, சிறுகுளம், போடான்குளம், செட்டிகுளம் ஆகிய கண்மாய் உட்பட 36 கண்மாய்கள் உள்ளன. இவற்றில் பெரும்பான்மையான கண்மாய்கள் தொடர் மழையால் நிரம்பி வருகின்றன. ஒரு சில கண்மாய்களின் கரை

பலமிழந்து உள்ளன. அவற்றை ஆய்வு செய்து பலப்படுத்தும் பணியை பொதுப்பணித்துறையினர் மேற்கொள்ள வேண்டும் என, இப்பகுதி விவசாயிகள் எதிர்பார்க்கின்றனர்.

## 'மீத்தேன்' எடுக்க அனுமதி மறுப்பு விவசாய சங்கங்கள் வரவேற்பு

தஞ்சாவூர்:'டெல்டா பகுதியில், மீத்தேன் எடுக்க அனுமதி கிடையாது' என, தமிழக அரசு அறிவித்துள்ளதற்கு, டெல்டா மாவட்ட விவசாய சங்கங்கள் வரவேற்பு தெரிவித்துள்ளன.திருவாரூர் மாவட்டம், மன்னார்குடியில், 691 சதுர கிலோ மீட்டர் பரப்பில், 'கிரேட் ஈஸ்டர்ன் எனர்ஜி கார்ப்பரேஷன்' நிறுவனம், நிலக்கரிப் படுகை மீத்தேன் வாயு வெளிக்கொணர்தல் மற்றும் உற்பத்தி தொடர்பான திட்டத்தை செயல்படுத்த திட்டமிட்டிருந்தது.இதனால், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, கடல்நீர் உட்புகுதல், வாழ்வாதாரம் மற்றும் உணவு பாதுகாப்பு ஆகியவற்றில் ஏற்படும் விளைவுகளை ஆராய, தொழில்நுட்ப வல்லுனர் குழுவை அமைத்து, மூன்று மாதங்களுக்குள் அறிக்கை சமர்ப்பிக்க, அரசு உத்தரவிட்டது.அதன்படி, வல்லுனர் குழுவும், தனது ஆய்வு அறிக்கையை அரசுக்கு சமர்ப்பித்தது. அதை பரிசீலித்த அரசு, 'மீத்தேன் திட்டத்திற்கு, எந்த ஒரு அனுமதியும் வழங்கப்பட மாட்டாது' என அறிவித்துள்ளது. அரசின் முடிவு, அரசாணையாகவும் வெளியிடப்பட்டுள்ளது.முதல்வர் ஜெயலலிதாவின் அதிரடி நடவடிக்கைக்கு, விவசாய சங்க பிரதிநிதிகள், அமோக வரவேற்பு தெரிவித்துள்ளனர்.மீத்தேன் எடுக்க அனுமதி வழங்கப்படாது என, அறிவித்துள்ள முதல்வர் ஜெயலலிதாவுக்கு நன்றி. டெல்டா பகுதியில், மீத்தேன் போன்ற எந்த திட்டங்களுக்கும், மத்திய அரசும் அனுமதி வழங்கக் கூடாது.விமல்நாதன் காவிரி விவசாயிகள் பாதுகாப்பு மாவட்ட செயலர்அரசின் முடிவை வரவேற்கிறோம். டெல்டா பகுதி மக்களின் ஒட்டுமொத்த வெற்றியாக இந்த அறிவிப்பு உள்ளது. தமிழக அரசு, அறிக்கையின் விவரங்களை வெளிப்படையாக மக்களுக்கு

தெரிவிக்க வேண்டும்.லெனின்மீத்தேன் எதிர்ப்பு குழு ஒருங்கிணைப்பாளர்

**மண் வளத்தை காக்க இயற்கை விவசாயம் அவசியம்:விழிப்புணர்வு ஏற்படுத்துமா வேளாண்துறை**



விருத்தாசலம்:மாவட்டத்தில் சம்பா சாகுபடி பணி துவங்கியுள்ள நிலையில், நெற்பயிருக்கு இயற்கை உரங்களை பயன்படுத்துவது குறித்து விவசாயிகளிடம், வேளாண் அதிகாரிகள் விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும்.மாவட்டத்தில் இயற்கை விவசாயத்திற்கான வாய்ப்புகள் இருந்தும் விவசாயிகளிடத்தில் விழிப்புணர்வு இல்லாததால், அதிக ரசாயன உரங்கள் இடுவதால், மண்வளம் பாதிக்கப்படுகின்றன.மாவட்டத்தில் 2.5 லட்சம் ஏக்கர் பரப்பளவில் சம்பா நெல் சாகுபடி செய்யப்படுகிறது. சம்பாவிற்கடுத்து குறுவை, சொர்ணவாரி பட்டங்களிலும் அதிகளவில் நெல் சாகுபடி செய்யப்படுகிறது.

ஆண்டுதோறும் அறுவடை சீசன் முடிந்ததும், ராமநாதபுரம், தூத்துக்குடி பகுதிகளில் இருந்து மேய்ச்சலுக்கு ஓட்டி வரப்படும் ஆடு, மாடுகளை,

இப்பகுதி விவசாயிகள் இயற்கை உரத்திற்காக, வயல்களில் கிடை மடக்குகின்றனர். அதேப்போன்று, நம் முன்னோர்கள் மேற்கொண்ட பாரம்பரிய சாகுபடி முறைபடி, சாகுபடிக்கு முன் வயல்களில் சணப்பை, தக்கைப்பூண்டு விதைப்பதோடு, வேம்பு, கொஞ்சி, ஆவாரம் உள்ளிட்ட தழைகளை அடியுரமாக இடுகின்றனர். அறுவடைக்கு பின் அடித்தாள்கள், நெற்பதர்களை நிலத்திலேயே எரித்து, சாம்பலாக்குகின்றனர்.

இதனால், பயிருக்குத் தேவையான தழைச் சத்து, சாம்பல் சத்து, மணிச் சத்து இயற்கையாகவே கிடைப்பதுடன், மண் வளமும் பாதிக்காது. தற்போதைய சூழலில், விவசாயிகளுக்கு பயிருக்கு தேவையான சத்துக்கள், மண்ணில் உள்ள சத்துக்கள் குறித்து போதிய விழிப்புணர்வு இல்லாததால், அதிக மகசூல் கிடைக்கும் என நம்பி, வயல்களில் தேவைக்கு அதிகமாக ரசாயன உரங்களை இடுவதால் கூடுதல் செலவு ஏற்படுவதோடு, மண்வளமும் பாதிக்கிறது. மேலும், அதிக தழைச்சத்து உரங்களை இடுவதால், நெற்பயிர்கள் பல்வேறு நோய் தாக்குதலுக்கு ஆளாகி, மகசூல் குறைகிறது. இதேப்போன்று, கடந்தாண்டு கூடுதல் மகசூல் கிடைக்கும் என்ற ஆசையில், தழைச்சத்து அதிகமுள்ள ரசாயன உரமான யூரியாவை இட்டதால், சம்பா நெற்பயிரில் பூச்சி, நோய் தாக்குதல் அதிகரித்து, மகசூல் குறைந்ததால், விவசாயிகள் பாதித்தனர். இதையடுத்து, வேளாண் அதிகாரிகள் நெற் பயிருக்கு யூரியா பயன்பாட்டை குறைக்கவும், இயற்கை விவசாயத்திற்கு மாறவும், விவசாயிகளுக்கு அறிவுறுத்தினர்.பாதிப்பு ஏற்பட்ட பின், அறிவுரை வழங்குவதை விட, தற்போது சம்பா சாகுபடிக்கு நாற்று விடும் பணி துவங்கியுள்ள நிலையில், மண் வளத்தை காக்கவும், மகசூல் பாதிப்பை தடுக்கவும், இயற்கைமுறை விவசாயம் குறித்து, விவசாயிகளிடம் விழிப்புணர்வு ஏற்படுத்த வேளாண்துறை அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும்.

## மழையால் நிரம்புகிறது பெரியாறு அணை

மதுரை:மதுரை, திண்டுக்கல், தேனியில் சில நாட்களாக மழை பெய்து வருவதால், அணைகளின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. அதிகபட்சமாக நேற்று முன்தினம் தேக்கடியில் க0.அ மி.மீ., மழை பதிவானது.\ மழையளவு( மி.மீ.,): மதுரை 1, இடையபட்டி 2.4, பெரியாறு 6.8, விரகனுார் 9.2.

அணைகளின் நீர் வரத்து: பெரியாறு அணை உயரம் 152 அடி. நீர் மட்டம் 117.50 அடி. நீர் இருப்பு 2,12,177 மில்லியன் கனஅடி. நீர் வரத்து வினாடிக்கு 726 கன அடி. வெளியேற்றம் 518கன அடி. வைகை அணை உயரம் 71 அடி. நீர் மட்டம் 48.16அடி. நீர் இருப்பு 1,752 மில்லியன் கனஅடி. நீர் வரத்து வினாடிக்கு 454 கனஅடி. வெளியேற்றம் 60 கனஅடி. மஞ்சளாறு அணை உயரம் 57 அடி. நீர் மட்டம் 56.80 கனஅடி. நீர் இருப்பு 482..64 மில்லியன் கனஅடி. நீர் வரத்து வினாடிக்கு 392 கனஅடி. வெளியேற்றம் 392 கனஅடி. மருதாநதி அணை உயரம் 64 அடி. நீர் மட்டம் 61.25 கனஅடி. நீர் இருப்பு 170..500 மில்லியன் கனஅடி. நீர் வரத்து வினாடிக்கு 138 கனஅடி. வெளியேற்றம் 90 கனஅடி.

## 3.52 லட்சம் டன் கரும்பு அரவை செய்ய இலக்கு

திருவாலங்காடு:கூட்டுறவு சர்க்கரை ஆலையில், கரும்பு அரவைக்கு கொதிகலன் இளம்சூடு ஏற்றும் விழா, சிறப்பு பூஜையுடன் நேற்று துவங்கியது. நடப்பாண்டில், 3.52 லட்சம் டன் கரும்பு அரவை செய்ய, இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது.

திருத்தணி கூட்டுறவு சர்க்கரை ஆலையில், கரும்பு அரவை, வரும், 26ம் தேதி துவங்கப்பட உள்ளது. இதற்காக நேற்று, ஆலையில் கொதிகலன் இளம்சூடு ஏற்றும் விழா, சிறப்பு பூஜையுடன் துவங்கியது. இதில், நிர்வாக தலைவர் எத்திராஜ், மேலாண்மை இயக்குனர் மலர்விழி உட்பட, 50க்கும் மேற்பட்டோர் பங்கேற்றனர்.

சூடு ஏற்றப்பட்ட கொதிகலன், 15 நாட்களில் சர்க்கரை தயாரிக்கும் நிலைக்கு வந்துவிடும். இதனால், வரும், 26ம் தேதி முதல் விவசாயிகளிடம் இருந்து, கரும்பு பெறப்பட்டு அரவை பருவம் துவங்கப்படுகிறது.இந்தாண்டில் மொத்தம், 3.52 லட்சம் டன் கரும்பு அரவை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது.

இதுகுறித்து, ஆலை மேலாண்மை இயக்குனர் மலர்விழி கூறுகையில், "நடப்பாண்டில், நமது ஆலையின் மூலம், 2.50 லட்சம் டன்; உளுந்துார்பேட்டை செங்கல்வாரயன் கூட்டுறவு சர்க்கரை ஆலையில் இருந்து, 50 ஆயிரம் டன்; வேலுார் அம்முண்டி கூட்டுறவு சர்க்கரை ஆலையில் இருந்து, 30 ஆயிரம் டன் கரும்பு அரவை செய்ய திட்டமிடப்பட்டுள்ளது," என்றார்.

மேலும், "வாலாஜாபாத் பத்மாவதி தனியார் சர்க்கரை ஆலையில் இருந்து, 22 ஆயிரம் டன் கரும்பு என மொத்தம், 3.52 லட்சம் டன் கரும்பு அரவை செய்ய திட்டமிட்டுள்ளது," என்றார்.

## இயந்திர நெல் நடவு நாற்றங்கால் வேளாண்மை துறையினர் ஆய்வு

கள்ளக்குறிச்சி:செம்படாக்குறிச்சியில் இயந்திரம் மூலம் நெல் நடவு செய்வதற்கு அமைத்துள்ள நாற்றங்கால் வயலை வேளாண்மை உதவி இயக்குனர் ஆய்வு செய்தார்.கள்ளக்குறிச்சியில் இயந்திரம் மூலம் நெல் நடவு செய்யும் விவசாயிகளுக்கு 3,000 ரூபாய் மானியம் வழங்கப்படும் என்று தமிழக அரசு அறிவித்துள்ளது. இதனையொட்டி விவசாயிகள்

இயந்திரம் மூலம் நெல் நடவு செய்வதற்கான பணிகளை மேற்கொண்டு வருகின்றனர்.கள்ளக்குறிச்சி அடுத்த செம்படாக்குறிச்சியில் விவசாயிகள் கோதண்டராமன், கலியன் ஆகியோர் இயந்திரம் மூலம் நெல் நடவு செய்வதற்கான ஏற்பாடுகளை செய்து வருகின்றனர். அவர்கள் அமைத்துள்ள நெல் நாற்றங்கால் வயலை, வேளாண்மை உதவி இயக்குனர் தர்மலிங்கம் ஆய்வு செய்தார்.ஆய்வின் போது வேளாண்மை அலுவலர் பொன்னுராசன், விரிவாக்க அலுவலர் கோபால், உதவி வேளாண்மை அலுவலர் மொட்டையாப்பிள்ளை, ஜெயக்குமார் மற்றும்

**இயந்திர நெல் நடவுக்குஅரசு மான்ய நிதியுதவி**

திருக்கோவிலூர்:திருக்கோவிலூர் பகுதியில் இயந்திர நெல் நடவு செய்யும் விவசாயிகளுக்கு மான்யம் வழங்கப்படுகிறது.இயந்திரம் மூலம் திருந்திய நெல் சாகுபடி செய்வதால் குறைந்த அளவே விதைநெல் தேவைப்படுகிறது. தண்ணீர் தேவை குறைவதோடு, களை எடுக்கும் செலவும் குறைகிறது. விவசாயிகளுக்கு செலவு குறைவதுடன் அதிக தூர் வெடித்து, பயிர் செழித்து வளர்ந்து கதிர்களில் அதிக மணி பிடிப்பதால், கூடுதல் மகசூல் கிடைக்கிறது.

இயந்திரம் மூலம் திருந்திய நெல் சாகுபடி செய்தால் கூடுதல் லாபம் கிடைக்கிறது. இதனை விவசாயிகள் பின்பற்றுவதால் அரசு வழங்கும் எக்டருக்கு 3 ஆயிரம் ரூபாய் மான்யத்தையும் பெற முடியும். இதற்கு வயலின் புகைப்படம், சிட்டா, அடங்கல், வங்கி கணக்கு எண் ஆகியவற்றை வேளாண்மை அலுவலகத்தில் வழங்கி பயன்பெறலாம். இது குறித்த மேலும் தகவல்களைபெற பகுதி வேளாண்மை அலுவலர், துணை வேளாண்மை அலுவலர், உதவி வேளாண்மை அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம்.இத்தகவலை திருக்கோவிலூர் வேளாண்மை உதவி இயக்குநர் நாராயணசாமி கூறினார்.

**மரக்கன்றுகள் நடு விழா**

விக்கிரவாண்டி:விக்கிரவாண்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் மரக்கன்றுகள் நடும்விழா நடந்தது.விழாவிற்கு லயன்ஸ் சங்க தலைவர் குமாரசாமி தலைமை தாங்கினார். மாவட்ட தலைவர்கள் விஜயராகவலு, அப்துல் சலாம், முரளிதரன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். கல்லூரி மாணவர் கார்த்திக் வரவேற்றார். மரக்கன்றுகள் நடும் விழா மாவட்ட தலைவர் சந்தானம், பள்ளி வளாகத்தில் மரக்கன்றுகளை நட்டார். பள்ளி தலைமை ஆசிரியர் பாபு, மாவட்ட தலைவர்கள் கீதாஞ்சலி சீனுவாசன், மணிவண்ணன், ராசி ரவிச்சந்திரன், பொருளாளர் ரமேஷ், தந்தை ரோவர் வேளாண்மை கல்லூரி மாணவர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர் .

### காற்றுடன் பெய்த மழையால்கரும்பு பயிர்கள் சாய்ந்து சேதம்

தியாகதுருகம்:தியாகதுருகத்தில் பலத்த காற்றுடன் பெய்த மழையால் கரும்பு பயிர்கள் மண்ணில் சாய்ந்து சேதமடைந்தன.

தியாகதுருகம் பகுதியில் கடந்த சில தினங்களாக இரவில் மழை பெய்து வருகிறது. பல மாதங்களாக மழையின்றி வறட்சி நிலவியதால், இரு தினங்களாக பெய்த மழையால் மண்ணின் ஈரத்தன்மை அதிகரித்துள்ளது.

மானாவாரி பயிர்கள் செழித்து வளர இம்மழை உதவியாக இருக்கும். மழையின் போது பலத்த காற்று வீசியதால் கரும்பு பயிர்கள் பல இடங்களில் மண்ணில் சாய்ந்தன. நீர் பற்றாக்குறையால் கரும்பு பயிர்கள் கருகி வந்த நிலையில் தற்போது மழை பெய்தும், பலத்த காற்று வீசியதால் கரும்பு உடைந்து மண்ணில் சாய்ந்து நஷ்டத்தை ஏற்படுத்தியுள்ளது.சமீபகாலமாக மழை பெய்யும் போது கோடை காலத்தை போல் இடி, மின்னலுடன் பலத்த காற்றும் வீசுவதால் விளை பயிர்களுக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக விவசாயிகள் கவலையுடன் தெரிவிக்கின்றனர்.

## ஏரிகளுக்கு முறை வைத்து தண்ணீர் திறந்து விட விவசாயிகள் கோரிக்கை

காரிமங்கலம்: காரிமங்கலம் அடுத்த பெரிய ஏரிக்கு, கே.ஆர்.பி., அணையில் இருந்து இந்தாண்டு கூடுதலாக உபரி நீர் திறக்க, விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர். கிருஷ்ணகிரி கே.ஆர்.பி., அணை உபரி நீர், கால்வாய் மூலம், தர்மபுரி மாவட்டம், காரிமங்கலம் அடுத்த திண்டல் ஏரிக்கு கொண்டு வரும் திட்டம், கடந்த, அ.தி.மு.க., ஆட்சியில் நிறைவேற்றப்பட்டது. கடந்த சில ஆண்டுகளாக, கே.ஆர்.பி., அணை நிரம்பியும், சீரான முறையில், தண்ணீர் திறந்து விடப்படாததால், திண்டல் ஏரி, காரிமங்கலம் பெரிய ஏரி, வண்ணான் ஏரி உட்பட, பல்வேறு ஏரிகளுக்கு போதிய தண்ணீர் வரத்து இல்லாமல் உள்ளது. இதனால், இந்த ஏரிகள் வறண்டதால், இப்பகுதியில் விவசாயம் கடுமையாக பாதிக்கப்பட்டது. இந்தாண்டு, கே.ஆர்.பி., அணைக்கு தண்ணீர் வரத்து தொடர்ந்து அதிகரித்ததால், அணையில் இருந்து உபரி நீர், வலது புற கால்வாயில் திறந்து விடப்பட்டது. இதனால், தேவர் முக்குளம், ஜெகதாப், கரகூர், கொள்ளுப்பட்டி உட்பட பல்வேறு ஏரிகள் நிரம்பின.

இந்நிலையில், தற்போது உபரி நீர், திண்டல் மற்றும் காரிமங்கலம் பெரிய ஏரிக்கு திறந்து விடப்பட்டுள்ளது. கடந்த, ஒரு வாரத்திற்கு மேலாக, தண்ணீர் இந்த ஏரிகளுக்கு மிக குறைந்தளவில் மட்டும் வந்து கொண்டிருக்கிறது. இதனால், ஏரிகள் நிரம்புவது கேள்வி குறியாகியுள்ளதால், விவசாயிகள் கவலை அடைந்துள்ளனர். இதேபோல், கடைகோடி பகுதிகளான, பந்தாரஹள்ளி, உச்சம்பட்டி ஆகிய பகுதிகளில் உள்ள ஏரிகளுக்கு, ஆண்டு தோறும் தண்ணீர் வராததால், ஏரிகள் வறண்டு காணப்படுகிறது. இப்பகுதி விவசாயிகள் நலன் கருதி, கே.ஆர்.பி., அணையில் இருந்து, திண்டல், பெரிய ஏரி

மற்றும் கடைகோடி பகுதியில் உள்ள ஏரிகள் நிரம்பும் வகையில், முறை வைத்து தண்ணீர் திறந்து விட நடவடிக்கை எடுக்க வேண்டும் என, தமிழக அரசுக்கு, இப்பகுதி விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## தேயிலை ஏலத்தில் ஏற்றமில்லை:தேக்கமடைந்த தேயிலை தூள்

குன்னுார்:கூட்டுறவு ஏல மையத்தில், 2.50 கோடி ரூபாய் மதிப்பிலான தேயிலை துாள் தேக்கமடைந்தது.குன்னுார் அரசு தேயிலை ஏல மையத்தில், இந்தாண்டுக்கான 38வது ஏலம் நடந்தது. ஏலத்தில் உள்நாடு மற்றும் வெளிநாடு வர்த்தகர்கள் மட்டும் பங்கேற்று குறைந்த அளவிலான தேயிலை துாளை கொள்முதல் செய்தனர். அனைத்து ரகத்திற்கு கிலோ ஒன்றுக்கு, 2 ரூபாய் வரை விலை சரிந்தது. கடந்த சில வாரங்களாக ஏல மையங்களில் தேயிலை துாளின் அளவு குறைந்து வருவதால், அனைத்து தரப்பினரும் பாதிக்கப்படும் சூழல் ஏற்பட்டுள்ளது.

இந்த வார நிலவரப்படி இலை ரகத்தில், சாதாரண வகை கிலோ ஒன்றுக்கு, 42 முதல் 45 ரூபாய்;உயர் வகை,75 முதல் 80 ரூபாய்; டஸ்ட் ரகத்திற்கு சாதாரண வகை, 40 முதல் 48 ரூபாய்; உயர் வகை, 70 முதல் 80 ரூபாய் வரை விலை கிடைத்துள்ளது. வெளிநாடு வர்த்தகர்களை பொறுத்தவரையில் பாகிஸ்தான் வர்த்தகர்கள் குறைந்த அளவிலான தேயிலை துாளை மட்டுமே கொள்முதல் செய்தனர். உள்நாட்டு வர்த்தகத்திலும் பாதிப்பு ஏற்பட்டதால், 2.50 கோடி ரூபாய் மதிப்பிலான தேயிலை துாள் தேக்கமடைந்தது.

## செம்மறி ஆடுகளை தாக்கும் நீலநாக்கு நோய் கட்டுப்படுத்த புதிய தடுப்பூசி கண்டுபிடிப்பு

கரூர்: செம்மறி ஆடுகளை தாக்கும், நீல நாக்கு நோயை கட்டுப்படுத்த புதிய தடுப்பூசி, சென்னை கால்நடை பல்கலைக்கழகம் மூலம் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கரூர் மாவட்டத்தில் க.பரமத்தி வட்டாரத்தில், முதல் கட்டமாக, 3,000 டோஸ் வழங்கப்பட உள்ளது. இது குறித்து, கால்நடை பராமரிப்பு துறை உதவி இயக்குனர் முருகேசன் கூறியதாவது: நவம்பர் மற்றும் டிசம்பர் மாதத்தில் குளிர்காலம் துவங்கி விடும். குளிர்காலத்தில் மாடு, எருமை, ஆடு ஆகிய கால்நடைகளை கோமாரி நோய் தாக்குகிறது. பிக்கோர்னா, எனப்படும் மிகச்சிறிய வைரஸ் நச்சுயிரிகளால் நோய் ஏற்படுகிறது. நோய் பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு கடும் காய்ச்சல், வாய், நாக்கு, மடி, காம்பு மற்றும் குளம்புகளுக்கு இடையே கொப்புளங்கள் மற்றும் புண்கள் காணப்படும். கால்நடைகளின் உமிழ்நீர், சிறுநீர், பால், சாணம் மற்றும் உபயோகப்படுத்திய தண்ணீர் மற்றும் தீவனதொட்டிகள், தீவனம், காற்று மூலம் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ நோய் பரவுகின்றன.நோய் தாக்குதலால், கறவை மாடுகளின் பால் உற்பத்தியும், எருதுகளின்வேலைத்திறனும் குறையும். கறவை மாடுகள் சினைப்பிடிப்பது தடைபடும். செம்மறி ஆடுகளுக்கு நீல நாக்கு நோய் பாதிப்பு ஏற்படும். இது ஒரு வகையான கொசுக்களால் ஏற்படுகிறது. நோய் பாதிக்கப்பட்ட கால்நடைகளை தனிமைப்படுத்தினால், நோய் பரவலை கட்டுப்படுத்தலாம். பாதிக்கப்பட்ட கால்நடைகளுக்கு கம்பங்கூழ்,கேழ்வரகு கூழ் போன்ற நீராதாரம் வழங்க வேண்டும். தற்போது முட்டையின் மஞ்சள் கருவை நீக்கி விட்டு, வெள்ளை கரு ஆடுகளுக்கு வழங்குவதால், புரதச்சத்து காரணமாக நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிக்கிறது. மாலை நேரத்தில் புகை மூட்டமிடவதால் கொசுக்களை கட்டுப்படுத்தலாம். இது குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்த மாவட்டம் முழுவதும் நோட்டீஸ் வினியோகம் செய்யப்பட உள்ளது. நீலநாக்கு நோய் கட்டுப்படுத்த, சென்னை கால்நடைஆராய்ச்சி பல்லைக்கழகம்

புதிய நீலநாக்கு நோய் தடுப்பூசி கண்டுபிடித்துள்ளது. முதல்கட்டமாக கரூர் மாவட்டத்தில் பரிதார்த்தமாக பரிசோதனை செய்ய, 3,000 டோஸ் வழங்கப்பட்டுள்ளது. அக்., 17 ம் தேதி க.பரமத்தி வட்டாரத்தில் உள்ள செம்மறிஆடுகளுக்கு தடுப்பூசி போடப்பட உள்ளது. இவ்வாறு, அவர் கூறினார்.

## தென்னையில் அதிக மகசூல் பெற புதிய தொழில்நுட்பம்

சாணார்பட்டி: சாணார்பட்டி அருகே தென்னையில் அதிக மகசூல் பெற புதிய தொழில்நுட்பம் குறித்து வேளாண்மை கல்லூரி மாணவர்கள் செயல் விளக்கம் அளித்தனர். பெரம்பலூர் ரோவர் வேளாண்மை கல்லூரியை சேர்ந்த மாணவர்கள் "கிராம தங்கல்' பாடத்திட்டத்தின் கீழ் திண்டுக்கல் மாவட்டம் நொச்சியோடைபட்டி பகுதியில் பயிற்சி பெற்று வருகின்றனர்.

தென்னையில் "வேரூட்டம்' என்ற புதிய தொழில் நுட்பத்தை இப்பகுதி விவசாயிகளுக்கு அறிமுகம் செய்தனர். மரத்தின் அடிப்பகுதியில் இருந்து இரண்டரை முதல் 3 அடி தூரத்தில், 4

இன்ச் ஆழத்தில் பென்சில் அளவு தடிமன் உள்ள மஞ்சள் நிற இளம் வேரை தேர்வு செய்ய வேண்டும்.

இதன் நுனிப்பகுதியை பிளேடால் சாய்வாக சீவ வேண்டும். 200 மில்லி நுண்ணூட்ட சத்து கரைசல் உள்ள பாலிதீன் பாக்கெட்டினுள் சீவப்பட்ட வேரை நுழைத்து பாக்கெட்டின் வாயை கட்டிவிட வேண்டும். அடுத்த 4 மணி நேரத்திற்குள் நுண்ணூட்ட கரைசலை வேர் உறிஞ்சிவிடும். அதன்பிறகு பாக்கெட்டை அகற்றி விடலாம். இதனை விவசாயிகளுக்கு மாணவர்கள் ஜான்வில்லியம்ஸ், சபரிசெல்வன் குழுவினர் செய்து காண்பித்தனர்.பயன்கள்: இவ்வாறு செய்வதன் மூலம் மருந்து விரைவில் நேரடியாக மரத்தில் சேர்கிறது. நுண்ணூட்ட கரைசல் சிறிதளவும் வீணாவதில்லை, செலவும் குறைவு. இந்த முறையை பின்பற்றுவதன்

மூலம் தென்னம்பிஞ்சுகள் உதிர்வதும் குறைகிறது. தேங்காயும் பருமனாக காய்க்கும் என மாணவர்கள் தெரிவித்தனர். இந்த நுண்ணுட்ட கரைசல்(தென்னை டானிக்) வேளாண்மை அறிவியல் மையங்கள் மற்றும் சில தனியார் கடைகளிலும் கிடைக்கும்.

## மழையால் கத்தரி விலை உயர்வு

வத்தலக்குண்டு:வத்தலக்குண்டு, நிலக்கோட்டை பகுதியில் மூன்று நாட்களாக மழை பெய்ததால் நாட்டுக் காய்கறிகளின் விலை உயர்ந்துள்ளது. வத்தலக்குண்டு, நிலக்கோட்டை பகுதியில் 3 நாட்களாக மழை பெய்தது. 2ம் நாளில் கனமழை பெய்ததில் கத்தரி பயிரிட்டுள்ள நிலத்தில் தண்ணீர் தேங்கியதால் பூக்கள் உதிர்ந்தன. பிஞ்சிலேயே காய்கள் முற்றின. முற்றிய காய்கள் அழுகியதால் தினசரி ஏலத்திற்கு காய்கள் வரத்து குறைவானது.

இதனால் ரூ.500க்கு ஏலம்போன, 30 கிலோ கத்தரி ரூ. 1000க்கு ஏலம் போனது. சில்லரை விற்பனையில் கத்தரி கிலோ ரூ.10ல் இருந்து ரூ. 30க்கு விற்கப்பட்டது. திடீர் விலை ஏற்றத்தால் பொதுமக்கள் தவித்தனர். கடந்த ஆண்டு பெய்த மழைக்கு நெல் பயிரிட்டவர்கள் வாழைக்கு மாறியதால் இதன் விளைச்சல் அதிகரித்து உள்ளது. வாழைக் காய்களை கேரள வியாபாரிகள் அதிகளவிற்கு தோட்டக்காரர்களிடம் ஒப்பந்த முறையில் பேசி வெட்டினர். இந்த ஆண்டு கேரள வியாபாரிகள் வராததால், தினசரி ஏலச் சந்தைக்கு வரத்து அதிகரித்து தாரின் விலை ரூ.70 ஆக குறைந்தது.

## காபி விவசாயிகள் கவனத்திற்கு

தாண்டிக்குடி:மத்திய அரசின் காபி வாரியமானது ஆண்டுதோறும் விதைக் காபி உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்குகிறது.

நடப்பாண்டில் கடந்த மாதம் முதல் பண்ணைக்காடு, பெருமாள்மலை, ஆடலூர், வத்தலக்குண்டு மற்றும் சிறுமலை பகுதி காபி வாரிய அலுவலகங்களில் விதைக் காபி முன்பதிவு செய்யப்பட்டு வருகிறது. முன்பதிவிற்கு கிலோ ஒன்றுக்கு ரூ. இருநூறு வீதம் செலுத்தி முன்பதிவு செய்யலாம். அக்., 31 ம் தேதி கடைசி என, வத்தலக்குண்டு காபி வாரிய முதுநிலை தொடர்பு அலுவலகம் தெரிவித்துள்ளது.

**விவசாய கண்காட்சி**

பழநி:தேனிமாவட்டம் பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி, ஆராய்ச்சி நிலையம் நான்காம் ஆண்டு மாணவர்கள் சார்பில் பழநி உழவர் சந்தையில் விவசாயக் கண்காட்சி நடந்தது.

கல்லூரி முதல்வர் பாலமோகன் தலைமை வகித்தார். வேளாண் உதவி இயக்குனர் சுருளியப்பன், உழவர்சந்தை நிர்வாகி காளிமுத்து முன்னிலைவகித்தனர். இதில் வேளாண் துறையில் வழங்கப்படும் மாடிதோட்டம், இயற்கைவிவசாயம், இயந்திர நடவுமுறை, நவீன தொழிற்நுட்பங்கள், காளான்வளர்ப்பு, தேனீவளர்ப்புமுறைகள் உள்ளிட்டவைகள் கண்காட்சியில் இடம்பெற்றது. பெரியகுளம் தோட்டக்கலை கல்லூரி பேராசிரியர் லட்சுமணன், உதவிபேராசிரியர் வேலுசாமி மற்றும் விவசாயிகள், பொதுமக்கள் பங்கேற்றனர். ஏற்பாடுகளை மாணவர்கள் மகேஷ், அமுதவன், சாய்பிரசாத், கோகுல்ராஜ், குகன்,மணிகண்டன், மதியழகன், சிவம்சத்துர்வேதி, லட்சுமணன் செய்திருந்தனர்.

**மலைப்பகுதிக்கு வந்த அவரை விதை**

தாண்டிக்குடி:தாண்டிக்குடி மலைப்பகுதியில் அவரை விதை விற்பனை தொடங்கிஉள்ளது.தாண்டிக்குடி கீழ்மலைப்பகுதியில் காபி, ஆரஞ்சு, மலை வாழை, மிளகு விவசாயங்களுக்கு மாற்றாக கடந்த சில

ஆண்டுகளாக அவரை விவசாயம் தலை தூக்கியுள்ளது. இதற்காக பெல்ட், சதை பெல்ட், யானைக் காது அவரை விதைகளை, நிலக்கோட்டை அருகே மைக்கேல்பாளையம் விவசாயிகள் மலைப்பகுதியில் நேரடி விற்பனையில் ஈடுபட்டுள்ளனர்.

கார்த்திகை முதல் வாரத்தில் விதை நடவு பணி துவங்கும் என்பதால் விதை விற்பனை

யாளர்கள் தாண்டிக்குடியில் முகாமிட்டுள்ளனர். தற்போது ஒரு படி விதை ரூ.700 க்கு விற்பனை செய்வது குறிப்பிடதக்கது.

### மஞ்சளாறு அணை நிரம்பியது

தேவதானப்பட்டி:தேனி மாவட்டத்தில் பெய்து வரும் தொடர் மழையால் தேவதானப்பட்டி அருகே மஞ்சளாறு அணை நிரம்பியது.

அணையின் மொத்த உயரம் 57 அடி. அணையின் மேற்குத் தொடர்ச்சி மலையில் உள்ள தலையாறு, மஞ்சளாறு, வறட்டாறு, மூலாறு பகுதியில் பெய்யும் தொடர் மழையால் அணைக்கு நீர் வரத்து அதிகரித்து உள்ளது.இந்த அணை நீரை ஆதாரமாக கொண்டு திண்டுக்கல், தேனி மாவட்டங்களில் உள்ள புதிய, பழைய ஆயக்கட்டு பாசனம் மூலம் 5,200 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

தற்போது அணையில் 56.80 அடிநீர் உள்ளது. இதனால் அணைக்கு வரும் 176 கன அடி நீர் முழுவதும் ஆற்றில் திறந்து விடப்பட்டுள்ளது. இந்த நீரால் செங்குளத்துப்பட்டி செங்குளம், கெங்குவார்பட்டி மத்துவார்குளம், கட்டக்காமன்பட்டி வீரன்குளம், தும்மலப்பட்டி கருவேலான்குளம், பழைய வத்தலக்குண்டு வேடகுளம், பெரியகுளம், குன்னுவராயன்

கோட்டை குளம், சிவஞானபுரம் ஆலங்குளம், சிறுகுளம் கண்மாய்கள் நிரம்பும்.

## கால்நடை நிலையங்களை சீரமைக்க வலியுறுத்தல்

ராமநாதபுரம்:ராமநாதபுரம் மாவட்டத்தில் சேத மடைந்த கால்நடை கிளை நிலையங் களை சீரமைக்க வேண்டுமென, தமிழ் நாடு கால்நடை ஆய்வாளர் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

அதன் மாவட்டக் கூட்டம் ராமநாத புரத்தில் நடந்தது. மாவட்ட செயலாளர் முத்துச்சாமி தலைமை வகித்தார். மாவட்ட மகளிரணி செயலாளர் கங்கா தேவி முன்னிலை வகித்தார். ராமநாத புரம் கோட்டச் செயலாளர் ராமானுஜம் வரவேற்றார்.

மாவட்டத்தில் உலையூர், மேலச் செல்வனூர், அ.தரைக்குடி, பெருங்களூர், கவிதைக்குடி, மேலப்பெருங்கரை, தேர் போகி, திருப்பாலைக்குடி, புத்தேந்தல், காஞ்சிரங்குடி ஆகிய கிராமங்களில் அதிகளவில் கால்நடைகள் வளர்க்கப்படுகின்றன. இதனால் அந்த கிராமங்களில் புதிய கால்நடை மருத்துவ கிளை நிலையங்களை துவங்க வேண்டும். சேதமடைந்த கால்நடை கிளை நிலையங்களை சரிசெய்து தர வேண்டும் உள்ளிட்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. பரமக்குடி கோட்டச் செயலாளர் முனீஸ்வரி நன்றி கூறினார்.

## மழைநீர் சேமிப்பு கருத்தரங்கு

ராமநாதபுரம்:ராமநாதபுரம் சுவார்ட்ஸ் மேல்நிலைப்பள்ளியில் மழைநீர் சேமிப்பு கருத்தரங்கு நடந்தது. இந்த கருத்தரங்கு சுவார்ட்ஸ், ராஜா, செய்யதம்மாள் மேல்நிலைப்பள்ளி என்.சி.சி., மாணவர்கள் சார்பில்

நடந்தது. தலைமை ஆசிரியர் பால்மாறன் தலைமை வகித்தார். பள்ளி என்.சி.சி., முதன்மை அலுவலர்கள் ராஜா சுவிஷேசபாண்டியன், ராஜாமணி, செந்தில்குமார் மழைநீர் அவசியம் குறித்து பேசினர்.

### திடீர் மழை: உப்பு உற்பத்தி பாதிப்பு

சித்தார்கோட்டை:ராமநாதபுரம் ஒன்றியத்திற்குட்பட்ட கோப்பேரி மடம், சித்தார்கோட்டை சாலையில் 100 ஏக்கர் பரப்பளவில் உப்பளப்பாத்திகள் உள்ளன. இங்கு வெளிமாவட்டங்களுக்கு அனுப்புவதற்காக டன் கணக்கில் உப்பு குவித்து வைக்கப்பட்டிருந்தது. நேற்று அதிகாலையில் பெய்த திடீர் மழையால் உப்பு கரைந்து பலத்த இழப்பு ஏற்பட்டது. மேலும் தெப்பம் அமைத்து தேக்கி வைக்கப்பட்டிருந்த உப்பள பாத்திகளில் மழைநீர் சூழ்ந்துள்ளதால் உப்பு உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. உப்பள உரிமையாளர் ஒருவர் கூறுகையில்,""இப்பகுதியில் விளையும் உப்புகளில் அதிகளவு காரத்தன்மை கிடையாது. இதனால் உணவிற்காகவும், மீன் பதப்படுத்துவதற்காகவும் மாவட்டத்தின் உள்ளூர் பகுதிகள், தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்டங்களுக்கு

வியாபாரிகள் டன் கணக்கில் வாங்கிச்செல்கின்றனர். திடீரென்று பெய்த பலத்த மழையால் உப்பு உற்பத்தி பாதித்துள்ளது," என்றார்.

### மாவட்டத்தில் மழை

விருதுநகர்: மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர் மழை பெய்துவருகிறது. மழையளவு(மி.மீ.,): சாத்தூர் 14, ஸ்ரீவி., 20.1, சிவகாசி .8, ராஜபாளையம் 70, காரியாபட்டி .2, வத்திராயிருப்பு 35, பிளவக்கல் 4.

நிமிர்ந்த நன்னடை நேர்கொண்ட பார்வை
தினமணி
நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகள்

**தமிழகம், புதுச்சேரியில் இன்று இடியுடன் கூடிய மழை பெய்யும்: வானிலை அறிவிப்பு**

தமிழகத்தின் தென் மாவட்டங்கள், புதுச்சேரியில் ஆங்காங்கே புதன்கிழமை இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்பு உள்ளது என, வானிலை ஆய்வு மையம் தெரிவித்தது.

தென் மேற்கு பருவ மழை காலத்தில் ஏற்பட்ட வெப்பசலனத்தால், தமிழகத்தில் பெரும்பாலான இடங்களில் மழை பெய்து வருகிறது. தொடர்ந்து பெய்து வரும் மழையால், முக்கிய அணைகளின் நீர்மட்டம் உயர்ந்து வருகிறது.

கடந்த 24 மணி நேரத்தில், மாநிலத்தின் அனேக மாவட்டங்களில் நல்ல மழை பதிவாகியது. இதில், அதிகபட்சமாக விருதுநகர் மாவட்டம் ராஜபாளையம், திருநெல்வேலி மாவட்டம் சங்கரன்கோவிலில் 70 மி.மீட்டர் மழை பதிவானது. அதற்கு அடுத்தபடியாக, திருநெல்வேலி மாவட்டம் ஆயக்குடி, ராமநாதபுரம் மாவட்டம் தொண்டி 50 மி.மீ, கன்னியாகுமரி மாவட்டம் குளித்துறை, ராமநாதபுரம் மாவட்டம் ஆர்.எஸ்.மங்கலம் உள்ளிட்ட இடங்களில் 40 மி.மீ. மழை பதிவானது.

தென் தமிழகம், புதுச்சேரியில் புதன்கிழமையும் ஆங்காங்கே இடியுடன் கூடிய மழை பெய்ய வாய்ப்புள்ளது. தமிழகத்தில் பருவ மழை தீவிரம் அடைந்துள்ளதால், மேற்குமலைத் தொடரை ஒட்டியுள்ள மாவட்டங்களில் அடுத்து வரும் நாள்களில் மழையை எதிர்பார்க்கலாம்.

சென்னை மாநகரைப் பொருத்தவரை, வானம் மேக மூட்டத்துடன் காணப்படும். மாலை அல்லது இரவு நேரங்களில் நகரின் ஒரு சில பகுதிகளில் இடியுடன் கூடிய மழை பெய்யும் என வானிலை ஆய்வு மைய அதிகாரிகள் தெரிவித்தனர்.

## அக்.20 இல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

மதுரை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் அக்.20 ஆம் தேதி நடைபெறும் என மாவட்ட ஆட்சியர் எல்.சுப்பிரமணியன் தெரிவித்துள்ளார்.

ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெறும் விவசாயிகள் குறைதீர் கூட்டத்தில், விவசாயம் தொடர்புடைய அனைத்துத் துறை அதிகாரிகள் பங்கேற்கின்றனர். விவசாயம் தொடர்பான தனிநபர் பிரச்னையாக இருப்பின் கோரிக்கைகளை மனுக்களாக அளிக்கலாம். பொதுப் பிரச்னையாக இருந்தால் கூட்டத்தில் கோரிக்கையாகத் தெரிவிக்கலாம் என்றார்.

## விவசாய கண்காட்சி

ஆண்டிபட்டி அருகே கதிர்நரசிங்காபுரத்தில் பெரியகுளம் அரசு தோட்டக் கலைக் கல்லூரி மாணவிகள் சார்பில் விவசாய கண்காட்சி திங்கள்கிழமை நடைபெற்றது.தோட்டக் கலைக் கல்லூரியில் நான்காம் ஆண்டு பயிலும் மாணவிகள் கிராம தங்கல் திட்டத்தின் கீழ் கிராமத்தில் தங்கி விவசாயிகளுடன் கலந்துரையாடி செய்முறை பயிற்சி மேற்கொண்டு வருகின்றனர். விவசாய கண்காட்சியினை தோட்டக் கலைக் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலைய முதல்வர் பாலமோகன், ஆண்டிபட்டி உதவி இயக்குநர் ஹர்சன் தங்கராஜ், தோட்டக் கலை அலுவலர் ரவீந்திரன் ஆகியோர் பார்வையிட்டனர்.

## பறவைகள் சரணாலயத்தில் கருவேல மரங்கள் அழிப்பு

சிவகங்கை மாவட்டம் வேட்டங்குடிபட்டி பறவைகள் சரணாலயத்தில் வளர்ந்துள்ள முள்செடிகளை ஆ.பி.சீ.அ.,கல்லூரி மாணவ மாணவியர் திங்கட்கிழமை அகற்றினர்.

திருப்பத்தூர் ஆறுமுகம்பிள்ளை சீதையமாள் கல்லூரி துணை முதல்வர் கோபிநாத் மற்றும் வனச்சரகர் அலுவலர் மதிவாணன், ஆலோசனையின் பேரில் கருவேல முள்செடிகள் அகற்றும் பணியில் விலங்கியியல் துறை மாணவ, மாணவியர்கள் இச்சரணாலயத்தில் இப்பணியை மேற்கொண்டு வருகின்றனர்.

இச்சரணாலயத்திற்கு மழை காலங்களில் வெளிநாடுகளில் இருந்து 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பறவைகள் வந்து இனவிருத்திக்கு பின் செல்லும். இந்த ஆண்டு குறைந்த மழை பெய்துள்ளதால், தற்போது வெள்ளைஅரிவாள்மூக்கன், கருப்புஅரிவாள் மூக்கன், பாம்புதாரா,நத்தைக்கொத்திநாரை, முக்குளிப்பான், உண்ணிக்கொக்கு, கருநீர்காகம் என சுமார் 3 ஆயிரம் பறவைகள் வந்துள்ளன. இப்பறவைகள் கூடு கட்டி வசிக்க, நாட்டு கருவேல மரங்கள் ஏதுவாக உள்ளன. அதே நேரம் முள்செடிகள் மரங்களாக வளர்ந்துள்ளதால், பலத்த காற்றின் போது கூடுகளில் முள்செடிகள் உரசி, பறவைகளின் முட்டை சேதமாகும் நிலை ஏற்படுகிறது. இதை தவிர்த்து சரணாலயத்தில் பறவைகள் சுதந்திரமாக தங்கி, இனப்பெருக்கம் செய்ய ஏதுவாக, திருப்புத்தூர் ஆ.பி.சீ.அ.,கல்லூரி மாணவர்களுடன் இணைந்து வனத்துறையினரும் முள்செடிகளை அகற்றி உறுதுணையாக உள்ளனர். மேலும் இப்பணியில் விலங்கியல் துறை பேராசிரியர்கள் ஆனந்தவள்ளி, சிவக்குமார், ஆரோக்கிய ஜான்பால், கார்த்திகேயன் உள்பட அத்துறை மாணவர்கள் பங்கேற்றனர்.

**பவானிசாகர் அணை நீர்மட்டம் 62.40 அடி**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை நிலவரப்படி 62.40 அடியாக இருந்தது.

அணைக்கு விநாடிக்கு 1,567 கனஅடி நீர் வந்தது. அணையில் இருந்து ஆற்றில் தண்ணீர் திறக்கப்படவில்லை. வாய்க்காலில் 1,500 கனஅடி நீர் திறக்கப்பட்டது. அணையில் நீர் இருப்பு 8.06 டி.எம்.சி.

**கறிக்கோழி கொள்முதல் விலை உயர்வு**

பல்லடம் பிராய்லர் கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழு தினந்தோறும் பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது.

திங்கள்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 51 ஆக இருந்தது. கோழி இறைச்சி நுகர்வு அதிகரித்ததால் செவ்வாய்க்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 53 ஆக நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

முட்டை விலை: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ. 3.02, சென்னையில் ரூ. 3.10.

**விவசாயிகளுக்கு வேளாண் பொறியியல் துறை மூலமாக ரூ.7.74 கோடி உதவி**

கன்னியாகுமரி மாவட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறை மூலமாக 3,868 விவசாயிகளுக்கு ரூ.7.74 கோடி மதிப்பில் உதவிகள் அளிக்கப்பட்டுள்ளதாக ஆட்சியர் சஜ்ஜன்சிங் ரா. சவாண் தெரிவித்தார்.

வேளாண்மைப் பொறியியல் துறை மூலம், விவசாயிகளுக்கு வேளாண் பணிகளை எளிதாக்கும் வகையில் மானிய விலையில் உபகரணங்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இம் மாவட்டத்தில் வேளாண்மை பொறியியல் துறை மூலம் செயல்படுத்தியுள்ள திட்டங்களை செவ்வாய்க்கிழமை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்.

ராஜாக்கமங்கலம், தோவாளை வட்டாரங்களில் வழங்கப்பட்ட கருவிகளின் செயல்பாடுகளை ஆய்வு செய்த பிறகு செய்தியாளர்களிடம் ஆட்சியர் கூறியது:

நிலம் மற்றும் நீர் வளங்களை பாதுகாக்கவும், மேம்படுத்தவும் வேளாண்மை பொறியியல் துறை மூலமாக விவசாயிகளுக்கு பல்வேறு உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. வேளாண்மையில் சூரியசக்தி பயன்பாட்டை அறிமுகம் செய்து மோட்டார் பம்பு இயக்குதலும் நடைபெறுகிறது.

இதில், குறிப்பிடும் வகையில் மேற்கு தொடர்ச்சி மலை மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் மண்வளப் பாதுகாப்பு பணிகளை செயல்படுத்த 245 விவசாயிகளுக்கு ரூ.4.22 கோடி மதிப்பில் கம்பி வலை தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன. மழைநீர் மற்றும் உபரி நீர் மேலாண்மைத் திட்டத்தின் மூலம் 45 விவசாயிகளுக்கு ரூ. 45 லட்சத்தில் 33 தடுப்பணைகள் கட்டப்பட்டுள்ளன. வேளாண் தொழிலாளர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் வேளாண்மையை இயந்திரமயமாக்கும் திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

இத் திட்டத்தின் மூலம், 6 விவசாயிகளுக்கு ரூ.3 லட்சத்தில் பவர் டில்லர்கள், ஒரு டிராக்டர் வழங்கப்பட்டுள்ளது. நவீன இயந்திரங்களின் செயல்பாடுகள் குறித்து விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. தேசிய வேளாண்மை வளர்ச்சித் திட்டத்தின் கீழ், 589 விவசாயிகளுக்கு ரூ.1.67 கோடி மதிப்பில் இயந்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

80 சதவீத மானியத்தில் சோலார் பம்பு செட்டுகள் ரூ.1.14 கோடி மதிப்பில் 33 விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. மேலும், வேளாண் பொருள்களை உலர்த்தும் வகையில் ரூ.3.68 லட்சத்தில் 2 சூரிய உலர் கூடாரம் அமைக்கப்பட்டுள்ளது. ரூ.13.55 லட்சத்தில் வேளாண் பொறியியல் துறைக்கு புதிய கட்டடமும் கட்டப்பட்டுள்ளது என்றார் ஆட்சியர்.

ஆய்வின்போது, மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் நிஜாமுதீன், செயற்பொறியாளர் அனந்தராஜ், உதவி செயற்பொறியாளர்கள் ஜான்கென்னடி, எட்வின், சுடலைமுத்து உள்ளிட்டோர் உடனிருந்தனர்.

### வடகிழக்குப் பருவமழை: பேரிடர் மேலாண்மை மாதிரி ஒத்திகை

வடகிழக்குப் பருவமழை தொடங்கவுள்ளதை முன்னிட்டு பேரிடர்களில் இருந்து தற்காத்துக்கொள்வது குறித்த மாதிரி ஒத்திகை விழிப்புணர்வு பயிற்சி முகாம் மாவட்ட ஆட்சியரகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

வடகிழக்கு பருவமழையின்போது ஏற்படும் பேரிடர்களில் இருந்து தப்பிக்கும் வழிமுறைகள், முன்னெச்சரிக்கை நடவடிக்கை குறித்து தீயணைப்பு, மீட்புப்பணிகள் துறை வீரர்கள் மூலம் மாதிரி ஒத்திகை விழிப்புணர்வுப் பயிற்சி முகாமை மாவட்ட ஆட்சியர் சு. கணேஷ் தொடக்கி வைத்துப் பேசியது:

இயற்கைப் பேரிடர் காலங்களில் ஏற்படும் எதிர்பாராத நிகழ்வுகளால் பொதுமக்கள் பல்வேறு வகைகளில் பாதிப்படைகின்றனர். இதைத் தடுக்கும் வகையில் சர்வதேச பேரிடர் தவிர்ப்பு தினத்தில் தீயணைப்பு, மீட்புப்பணிகள் துறை மூலம் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த அரசு உத்தரவிட்டுள்ளது. அதனடிப்படையில் தற்போது பேரிடர்களில் இருத்து தற்காத்துக் கொள்வது குறித்த மாதிரி ஒத்திகை விழிப்புணர்வு பயிற்சி நடைபெறுகிறது.

இதில், வடகிழக்குப் பருவமழை காலங்களில் ஏற்படும் வெள்ளபெருக்கால் ஏற்படும் பாதிப்பின்போது தீயணைப்புத் துறையின் மூலம் பயன்படுத்தப்படும் உபகரணங்கள், அவற்றின் பயன்கள் தீயணைப்புத் துறையினர் வருவதற்கு முன்பு பொதுமக்கள் வெள்ள அபாயங்களிலிருந்து வீட்டிலிருக்கும் பிளாஸ்டிக் குடங்கள் போன்ற பொருட்களை பயன்படுத்தி எவ்வாறு தப்பிப்பது, மாடிக் கட்டடங்களில் இடிபாடுகளில் சிக்கித் தப்பிக்க முடியாமல் முதல் அல்லது இரண்டாம் தளங்களில் சிக்கிக் கொண்டவர்களை தார்ப்பாய், பெரிய கம்பளங்களை

சறுக்கு அமைப்பாகப் பயன்படுத்தி எவ்வாறு மீட்பது குறித்தும் செயல் முறை ஒத்திகை மூலம் பயிற்சி அளிக்கப்பட்டது.

மேலும், பேரிடர் காலங்களில் பல்வேறு வகைகளில் காயமுற்ற, மயக்கமுற்றவர்களை கைகளைப் பயன்படுத்தியும், செயற்கை நோயாளர் தூக்கியைப் பயன்படுத்தி எவ்வாறு பாதுகாப்புடன் மீட்டுச் செல்வது, புகையில் மாட்டிக்கொண்டவர்கள் எவ்வாறு பாதுகாப்புடன் வெளியேறுவது, அவர்களை எவ்வாறு மீட்பது போன்ற பல்வேறு செயல்முறை விளக்கங்கள் பொதுமக்கள் மற்றும் அரசு அலுவலகப் பணியாளர்களுக்கு செய்து காண்பிக்கப்பட்டது.

எனவே, அனைவரும் இத்தகைய விழிப்புணர்வு ஒத்திகை பயிற்சிகளின் மூலம் பேரிடர் காலங்களில் தங்கள் உயிரையும், உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றார் ஆட்சியர்.

புதுகை எம்எல்ஏ வி.ஆர். கார்த்திக்தொண்டமான், மாவட்ட வருவாய் அலுவலர் சு. மாரிமுத்து, தீயணைப்பு மீட்புப்பணிகள் துறை மாவட்ட அலுவலர் ஹக்கீம்பாஷா, நிலைய அலுவலர் ஆர். சாந்தார், பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## விதை கிராமத் திட்ட விவசாயிகளுக்குப் பயிற்சி

கந்தர்வகோட்டை அருகே குன்றாண்டார் கோவில் வட்டாரத்தில் அட்மா விரிவாக்க சீரமைப்புத் திட்டத்தின் கீழ் விதை கிராமத் திட்ட விவசாயிகள் பயிற்சி குடுமியான்மலை வேளாண் துணை இயக்குநர் வ. சாந்தி தலைமையில் திங்கள்கிழமை நடைபெற்றது.

வேளாண் அலுவலர் அ. கண்ணன் உளுந்து பயிரில் தரமான விதை உற்பத்தி செய்வதன் முக்கியத்துவத்தை எடுத்துக் கூறினார். உழவர் பயிற்சி நிலைய வேளாண் அலுவலர் செல்வி உளுந்துப் பயிரில் மகசூல் அதிகரிப்பு செய்திட கடைபிடிக்க வேண்டிய தொழில்நுட்பங்களை விரிவாக எடுத்துரைத்தார். பயிற்சியில் புதுக்கோட்டை விதைச்சான்று அலுவலர் பாண்டியன் தரமான விதை உற்பத்தி செய்தல், விதைப்

பண்ணை அமைத்தல் பற்றிய தொழில்நுட்ப செய்திகளை எடுத்துரைத்தார். பயிற்சியில் குன்றாண்டார்கோவில் வட்டாரத்தைச் சேர்ந்த பண்ணை மகளிர் மற்றும் விவசாயிகள் 40 நபர்கள் கலந்து கொண்டனர். தரமான விதை உற்பத்தி தொடர்பான பண்ணைப்பள்ளி பயிற்சி திருமலைராயபுரம் கிராமத்தில் வேளாண் இணை இயக்குநர் கே.எம். ஷாஜகான் தலைமையில் தொடக்கி வைக்கப்பட்டது. ஏற்பாடுகளை அட்மா திட்ட தொழில்நுட்ப அலுவலர்கள் ந. நிஷா, கா. சுப்பிரமணியன் ஆகியோர் செய்தனர்.

**இயற்கை இடர்பாடு குறித்து கட்டணமில்லா எண்ணில் தெரிவிக்கலாம்**

புதுக்கோட்டை மாவட்டத்தில் பருவமழைக் காலங்களில் நேரிடும் இயற்கை இடர்பாடுகள் குறித்து மாவட்ட நிர்வாகத்துக்கு 1077 என்னும் கட்டணமில்லா தொலைபேசியில் தொடர்பு கொண்டு தகவல் அளிக்கலாம் என்றார் ஆட்சியர் சு. கணேஷ்.

புதுகை பொது அலுவலக வளாகத்தில் மாவட்ட நிர்வாகம் சார்பில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற சர்வதேச பேரிடர் தவிர்ப்பு தின விழிப்புணர்வு பேரணியைத் தொடக்கிவைத்து மேலும் பேசியது:

இயற்கைப் பேரழிவுகளான பூகம்பம், சுனாமி, நிலச்சரிவு, நிலநடுக்கம், சூறாவளி போன்ற பேரிடர்களில் இருந்து தற்காத்துக்கொள்வது குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் அக்.13 -ஆம் தேதி சர்வதேச பேரிடர் தவிர்ப்பு தினமாக அனுசரிக்கப்படுகிறது. அதனடிப்படையில் தமிழக அரசு பொதுமக்களுக்கு இயற்கை இடர்பாடுகள் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்தும் நோக்கில் விழிப்புணர்வு பேரணிகளை நடத்த உத்தரவிட்டுள்ளது.

இப்பேரணியில் பங்கேற்பவர்கள் இயற்கை இடர்பாடுகள் உருவாகும் முறைகள், பேரழிவுகள் ஏற்படும்போது தங்களைப் பாதுகாத்துக் கொள்ளும் வழிமுறைகள், பிறரைப் பாதுகாக்கும் வழிமுறைகள் போன்ற பல்வேறு விழிப்புணர்வைப் பெற வேண்டும். நமது மாவட்டத்தில் ஏற்படும் இயற்கை இடர்பாடுகள் குறித்து பல்வேறு அவசரத்

தகவல்களை பொதுமக்கள் மாவட்ட அவசரக் கட்டுப்பாட்டு அறையின் தொலைபேசி 1077 - எண்ணைத் தொடர்பு கொண்டு தெரிவிக்கலாம்.

எனவே, பொதுமக்கள் அனைவரும் இப்பேரணியின் மூலம் இயற்கை இடர்பாடுகள் குறித்து போதிய விழிப்புணர்வைப் பெற்று பேரழிவுக் காலங்களில் தங்களது உயிரையும், உடைமைகளையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்றார் ஆட்சியர்.

பொது அலுவலக வளாகத்தில் தொடங்கிய பேரணி எம்.ஜி.ஆர். சிலை, அண்ணா சிலை, கீழராஜவீதி, பிருந்தாவனம் வழியாக மீண்டும் பொது அலுவலக வளாகத்தைச் சென்றடைந்தது. இதில், எம்எல்ஏ வி.ஆர். கார்த்திக்தொண்டமான், மாவட்ட வருவாய் அலுவலர் சு. மாரிமுத்து, வருவாய் கோட்டாட்சியர் ப. ஜோதிலிங்கம், மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் செ. சாந்தி, மாவட்ட ஊராட்சித் தலைவர் வி.சி. ராமையா, நகராட்சி ஆணையர் (பொ) ஜெ. சுப்பிரமணியன்,வட்டாட்சியர் ஜெயபாரதி, பள்ளி மாணவ, மாணவிகள், ஆசிரியர்கள், வருவாய்த் துறை அலுவலர்கள், பொதுமக்கள் உள்பட ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

**வடகிழக்கு பருவமழைக்காக கட்டுப்பாட்டு மையம்**

வடகிழக்குப் பருவ மழைக்காக தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியரகத்தில் அவசர கால கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட ஆட்சியர் என். சுப்பையன் தெரிவித்திருப்பது:

வடகிழக்குப் பருவ மழை தொடங்கவுள்ள நிலையில் தஞ்சாவூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் 24 மணிநேரமும் செயல்படும் அவசர கால கட்டுப்பாட்டு மையம் அமைக்கப்பட்டுள்ளது.இதில் உள்ள இலவச தொலைபேசி எண் 1077-ஐ பொதுமக்கள் தொடர்பு கொண்டு பருவமழையால் ஏற்படும் இன்னல்களைத் தெரிவிக்கலாம்.

**வேளாண் விளைபொருள்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்வது குறித்த பயிற்சி**

வெண்ணந்தூர் வட்டாரத்தில் வேளாண் தொழில்நுட்ப மேலாண்மை முகமை சார்பில், விவசாயிகளுக்கு வேளாண் உற்பத்தி பொருள்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்வது குறித்து மூலக்காடு, அண்ணாமலைப்பட்டி, பழந்தின்னிப்பட்டி விவசாயிகளுக்கு அண்மையில் ஒருநாள் பயிற்சி அளிக்கப்பட்டது.

இதில், வேளாண் விற்பனை, வணிகத் துறை வேளாண் அலுவலர்கள் ராஜேஸ்வரி, பாபு ஆகியோர் விவசாயிகளுக்கு பயிற்சியளித்தனர்.

இதில், வேளாண் உதவி இயக்குநர், கு.சுந்தரவடிவேல், வேளாண் உற்பத்தி பொருள்களின் அறுவடை பின்செய் நேர்த்தியின் தொழில்நுட்பம் குறித்து விளக்கினார். வேளாண் அலுவலர் கை.வசுமதி, சிறுதானியங்களை மதிப்பு கூட்டி விற்பனை செய்வது குறித்து பயிற்சியளித்தார்.

பயிற்சியில் "அட்மா' திட்ட வட்டாரத் தொழில் நுட்ப மேலாளர் ரமேஷ், திட்டப் பணிகள், செயல்பாடுகள் குறித்து விளக்கினார்.

### மேட்டூர் அணை நீர்மட்டம் 68.75 அடியாக சரிவு

மேட்டூர் அணையின் நீர்ப்பிடிப்பு பகுதிகளில் திங்கள்கிழமை பரவலாக மழை பெய்ததால், அணைக்கு வரும் நீரின் அளவு அதிகரித்துள்ளது.

திங்கள்கிழமை காலை மேட்டூர் அணைக்கு நொடிக்கு 3,793 கன அடி தண்ணீர் வந்து கொண்டிருந்தது. மழை காரணமாக செவ்வாய்க்கிழமை காலை நீர் வரத்து நொடிக்கு 4,668 கன அடியாக அதிகரித்துள்ளது. அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்கும் கிழக்கு, மேற்கு கால்வாய்ப் பாசனத்துக்கும் நொடிக்கு 8,916 கனஅடி தண்ணீர் திறக்கப்படுகிறது. செவ்வாய்க்கிழமை காலை மேட்டூர் அணையின் நீர் மட்டம் 68.57 அடியாக சரிந்தது. அணையின் நீர் இருப்பு 31.48 டி.எம்.சி.

நீர்மட்டம் தொடர்ந்து சரிந்து வருவதால், காவிரி டெல்டா பாசனத்துக்கு தொடர்ந்து தண்ணீர் கிடைக்குமா என்பது கேள்விக்குறியாக உள்ளது. ஆனாலும், பரவலாக மழை பெய்து வருவதால், மேட்டூர் அணைக்கு நீர்

வரத்து அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்று பொதுப்பணித் துறை அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

**கறவை மாடு வாங்க கடன் அளிப்பு**

தண்டராம்பட்டு உழவர் பணி கூட்டுறவுக் கடன் சங்கம் சார்பில், விவசாயச் சங்க உறுப்பினர்களுக்கு கறவை மாடு வாங்குவதற்கான கடன் வழங்கும் நிகழ்ச்சி தரடாப்பட்டை அடுத்த கன்னக்கந்தலில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில் 41 பேருக்கு தலா ரூ. 25,000 வீதம் மொத்தம் ரூ. 10,25,000 ஆயிரம் ரூபாய்க்கு கறவை மாடுகளுக்கு கடனுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் தண்டராம்பட்டு ஒன்றியக் குழுத் தலைவர் டி.ஜானகிராமன், கூட்டுறவு சங்கத் தலைவர் வித்யா தேவேந்திரன், கால்நடை மருத்துவக் குழுவினர், கூட்டுறவுக் கடன் சங்கச் செயலாளர் ஜி.காளிதாஸ், காசாளர் கே.காமராஜ், பால் கூட்டுறவு சங்கத் தலைவர் பி.லோகநாதன், ஒன்றியக் குழு உறுப்பினர் எம்.ஆர். நடராஜன், கூட்டுறவு சங்க இயக்குநர்கள் என்.வேல்முருகன், பழனி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

**வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பு ‘அரசு கட்டிடங்களில் மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை பராமரிக்க வேண்டும்’; பொதுப்பணித்துறை அதிகாரிகள் உத்தரவு**




சென்னை,

‘வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பு அரசு கட்டிடங்களில் உள்ள மழைநீர் சேகரிப்பு அமைப்புகளை பராமரிக்க வேண்டும்’ என்று பொதுப்பணித்துறை அதிகாரிகள் உத்தரவிட்டுள்ளனர். மழைநீர் சேகரிப்புதமிழக முதல்-அமைச்சர் ஜெயலலிதாவின் பெருமுயற்சியால் சென்னையில் மழைநீர் சேகரிப்பிற்கு அதிக முக்கியத்துவம் கொடுக்கப்பட்டு, அதற்கான கட்டமைப்புகள் உருவாக்கப்பட்டு மழைநீர் சேகரிப்பில் சென்னை ஒரு முன்னோடி மாநகரமாக திகழ்ந்து வருகிறது. இந்த நிலையில் சமீபத்தில் சென்னை வந்த மத்திய மந்திரி வெங்கையா நாயுடு, மழைநீர் சேகரிப்பு திட்டத்தில் தமிழ்நாடு முன்னோடி மாநிலமாக செயல்படுவதாக பெருமிதம் கொண்டார். இந்த நிலையில் தமிழ்நாட்டில் வரவிருக்கும் வடகிழக்கு பருவமழை மூலம் பெறப்படும் மழைநீரை சேகரிப்பதற்கான நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டு உள்ளன. அதேபோல் அரசு அலுவலகங்களிலும் அமைக்கப்பட்டுள்ள மழைநீர் கட்டமைப்புகளையும் பொதுப்பணித்துறையினர் பராமரித்து வருகின்றனர். அந்த வகையில் தற்போது வடகிழக்கு பருவமழை தொடங்குவதற்கு முன்பாக அனைத்து மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளையும் பராமரிக்க பொதுப்பணித்துறை

உத்தரவிட்டுள்ளது. இதுகுறித்து பொதுப்பணித்துறை உயர் அதிகாரிகள் கூறியதாவது:-

நீர்வளம் அதிகரிப்பு

மழை பெய்யும்போது நேரடியாக அதனை சேகரிப்பதும், பூமிக்குள் செலுத்துவதுமே மழைநீர் சேகரிப்பாகும். இதன் மூலம் தண்ணீர் பற்றாக்குறையைத் தவிர்ப்பதுடன், நீர்வளத்தையும் அதிகரிக்க முடியும். மேலும் நீர் மட்டம் குறைவது தடுக்கப்படுவதுடன், நீரின் தரத்தை அதிகரிக்க முடிகிறது. அத்துடன் கடலோர பகுதிகளில் கடல்நீர் ஊடுருவலை தவிர்க்கலாம். வெள்ளப்பெருக்கை கட்டுப்படுத்தலாம். களிமண் பகுதிகளில் உள்ள கட்டிடங்களில் உருவாகும் விரிசல்களையும் இதன் மூலம் தடுக்க முடியும். எனவே தமிழக அரசு மழைநீர் சேகரிப்பிற்கு அதிக முக்கியத்துவம் அளித்து வருகிறது.23 ஆயிரம் கட்டிடங்கள் பராமரிப்பு

வருவாய்த்துறை, நீதிமன்றங்கள், அரசு பள்ளி, அரசு கல்லூரிகள் உள்ளிட்ட 32 அரசு துறைகளுக்கான கட்டிடங்கள் மற்றும் அரசு அலுவலர்கள் குடியிருப்புகளில் மழைநீர் சேகரிப்பு கட்டமைப்புகளை பொதுப்பணித்துறை அமைத்து பராமரித்து வருகிறது. அந்த வகையில் கடந்த 2014-2015-ம் ஆண்டு 23 ஆயிரத்து 343 கட்டிடங்களில் அமைக்கப்பட்டிருந்த மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் பழுது நீக்கப்பட்டுள்ளன. அத்துடன் 2 ஆயிரத்து 71 கட்டிடங்களில் புதிதாக மழைநீர் சேகரிப்பு அமைப்புகளையும் ஏற்படுத்தி உள்ளோம்.தற்போது வடகிழக்கு பருவமழை தொடங்கவிருப்பதால் தமிழகத்தில் பொதுப்பணித்துறை கட்டுப்பாட்டில் உள்ள அனைத்து மழைநீர் சேகரிப்பு அமைப்புகள் மற்றும் வடிகால்களையும் சீரமைக்க தமிழகத்தில் உள்ள அனைத்து மாவட்ட பொதுப்பணித்துறை அதிகாரிகளுக்கும் உத்தரவிடப்பட்டுள்ளது.

நிலத்தடி நீர்மட்டம் உயர்வு

சென்னை மாநகரின் நீர்தேக்கங்கள் பெரும்பாலும் அக்டோபர், நவம்பர் மற்றும் டிசம்பர் மாதங்களில் பெய்யும் வடகிழக்கு பருவமழையையே சார்ந்திருக்கின்றன. இந்த பருவ மழை மூலமே சென்னையில் உள்ள நீர்தேக்கங்களில் அதிகமாக நீர் சேகரிக்கப்படுகிறது. இவ்வாறு சேகரிக்கப்படும் மழை நீரின் காரணமாக சென்னையின் நிலத்தடிநீர் மட்டம் உயர்வதோடு அடுத்த கோடைக்காலத்திற்கும் நிலத்தடி நீரை பயன்படுத்த உதவியாக இருக்கிறது.இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.

## தென்தமிழகத்தில் இன்று மழை பெய்யும்; வானிலை ஆய்வு மையம் தகவல்



சென்னை,

தமிழகத்தில் இந்த மாதம் தொடக்கத்தில் இருந்தே அனைத்து பகுதிகளிலும் பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. இந்த நிலையில், அடுத்த 24 மணி நேரத்தில் (இன்று) தென்தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், வடதமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

வெப்பச்சலனம் காரணமாக தமிழகத்தில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. அடுத்த 24 மணி நேரத்தை பொறுத்தவரையில்

(இன்று), குமரிக்கடல் பகுதியில் ஏற்பட்டுள்ள மேலடுக்கு சுழற்சி மற்றும் வெப்பச்சலனம் காரணமாக தென் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், வடதமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் மழை பெய்யும். சென்னையை பொறுத்தவரையில், வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில பகுதிகளில் ஆங்காங்கே மாலை அல்லது இரவு நேரங்களில் மழை பெய்ய வாய்ப்பு இருக்கிறது.இவ்வாறு அவர் கூறினார்.

## மின்சாரம், இடி-மின்னல் தாக்கி உயிர் இழந்தவர்கள் குடும்பங்களுக்கு தலா ரூ.1 லட்சம்; ஜெயலலிதா உத்தரவு



சென்னை,

மின்சாரம், இடி-மின்னல் தாக்கி உயிர் இழந்தவர்கள் குடும்பங்களுக்கு தலா ரூ.1 லட்சம் வழங்க முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.இதுகுறித்து முதல்-அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

மின்சாரம் தாக்கி சாவு

5-6-2015 அன்று ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், வெள்ளிதிருப்பூர் கிராமத்தைச் சேர்ந்த பழனியப்பன் தோட்டத்தில் மாடுகளை

கட்டுவதற்காக சென்றபோது திடீரென மின் கம்பி அறுந்து விழுந்ததில் சம்பவ இடத்திலேயே உயிர் இழந்தார்.

\5-6-2015 அன்று திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பெரியம்மாபட்டி உட்கடை சண்முகம்பாறை கிராமத்தைச் சேர்ந்த சண்முகக் கவுண்டரின் மகன் தங்கவேல் வயல்வெளியில் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததால் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிர் இழந்தார்.

இடி-மின்னல்...

ராமநாதபுரம் மாவட்டத்தில் பெய்த மழையின் காரணமாக, பரமக்குடி வட்டம், மஞ்சூர் உள்வட்டம், கருத்தனேந்தல் கிராமத்தைச் சேர்ந்த பாண்டியின் மகன் கணேசமூர்த்தி மற்றும் திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், தண்டலச்சேரி கிராமத்தைச் சேர்ந்த சாரங்கன் ஆகியோர் இடி, மின்னல் தாக்கியதில் உயிர் இழந்தனர்.

தலா ரூ.1 லட்சம்

இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மேலும், உயிர் இழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.1 லட்சம் முதல்-அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

சென்னை,

மின்சாரம், இடி-மின்னல் தாக்கி உயிர் இழந்தவர்கள் குடும்பங்களுக்கு தலா ரூ.1 லட்சம் வழங்க முதல்-அமைச்சர் ஜெயலலிதா உத்தரவிட்டுள்ளார்.

இதுகுறித்து முதல்-அமைச்சர் ஜெயலலிதா வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:-

மின்சாரம் தாக்கி சாவு

5-6-2015 அன்று ஈரோடு மாவட்டம், அந்தியூர் வட்டம், வெள்ளிதிருப்பூர் கிராமத்தைச் சேர்ந்த பழனியப்பன் தோட்டத்தில் மாடுகளை கட்டுவதற்காக சென்றபோது திடீரென மின் கம்பி அறுந்து விழுந்ததில் சம்பவ இடத்திலேயே உயிர் இழந்தார். 5-6-2015 அன்று திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், பெரியம்மாபட்டி உட்கடை சண்முகம்பாறை கிராமத்தைச் சேர்ந்த சண்முகக் கவுண்டரின் மகன் தங்கவேல் வயல்வெளியில் அறுந்து கிடந்த மின்கம்பியை மிதித்ததால் மின்சாரம் தாக்கி சம்பவ இடத்திலேயே உயிர் இழந்தார். இடி-மின்னல்...

ராமநாதபுரம் மாவட்டத்தில் பெய்த மழையின் காரணமாக, பரமக்குடி வட்டம், மஞ்சூர் உள்வட்டம், கருத்தனேந்தல் கிராமத்தைச் சேர்ந்த பாண்டியின் மகன் கணேசமூர்த்தி மற்றும் திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம், தண்டலச்சேரி கிராமத்தைச் சேர்ந்த சாரங்கன் ஆகியோர் இடி, மின்னல் தாக்கியதில் உயிர் இழந்தனர். தலா ரூ.1 லட்சம்இந்த துயர சம்பவங்களில் அகால மரணமடைந்தவர்களின் குடும்பங்களுக்கு எனது ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தையும் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், உயிர் இழந்தவர்களின் குடும்பங்களுக்கு தலா ரூ.1 லட்சம் முதல்-அமைச்சரின் பொது நிவாரண நிதியிலிருந்து வழங்க நான் உத்தரவிட்டுள்ளேன். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## சம்பா பருவ நெல் சாகுபடியில் அதிக லாபம் பெறுவது எப்படி? வேளாண்மைத்துறை இணை இயக்குனர் விளக்கம்



ஆனைமலை

சம்பா பருவ நெல் சாகுபடியில் அதிக லாபம் பெறுவது எப்படி? என்று வேளாண்மைத்துறை இணை இயக்குனர் சந்திரசேகரன் விளக்கம் அளித்துள்ளார்.

நெல் அறுவடை

ஆனைமலை வட்டாரத்தில் வேளாண்மை பிரதான தொழிலாக உள்ளது. பழைய ஆயக்கட்டு பாசனப்பகுதியில் குறுவை, சம்பா என இருபோகம் நெல் சாகுபடி நடைபெற்று வருகிறது. தற்போது 3 ஆயிரம் ஏக்கர் பரப்பளவில் சாகுபடி செய்யப்பட்டிருந்த குறுவை நெல் அறுவடை முழுவீச்சில் நடைபெற்று வருகிறது.குறுவை அறுவடையை முடித்த விவசாயிகள் சம்பா பருவத்துக்கான ஆயத்த பணிகளில் முழுவீச்சில் ஈடுபட்டுள்ளனர். விவசாய கூலி தொழிலாளர்கள் பற்றாக்குறை உள்ளதால் விவசாயிகள் எந்திரம் மூலம் நாற்று நடவு செய்வதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர். எந்திரம் மூலம் நடவு செய்வதற்கு பாய் நாற்றங்கால்முறையில் நெல் நாற்றுகள் தயாரிக்க வேண்டும். இதற்கான பணிகள் தொடங்கப்பட்டுள்ளது.

நாற்றுகள் உற்பத்தி

ஆனைமலை வட்டாரத்தில் பெத்தநாயக்கனூர் பகுதியில் சம்பா நெல் நாற்றுகள் உற்பத்தி செய்யும் பணியை மாவட்ட வேளாண்மைத்துறை இணை இயக்குனர் சந்திரசேகரன் தொடங்கி வைத்தார். நிகழ்ச்சியில் வட்டார வேளாண்மை உதவி இயக்குனர் சிவக்குமார், வேளாண்மை அலுவலர் மைதிலி, துணை வேளாண்மை அலுவலர் கோவிந்தராஜன், உதவி வேளாண்மை அலுவலர்கள் சகாப்தீன், செல்வகுமார், ஜாபர்அலி, பூபதி மற்றும் விவசாயிகள் கலந்து கொண்டனர். இது குறித்து இணை இயக்குனர் சந்திரசேகரன் கூறியதாவது:- கோவை மாவட்டத்தில் ஆனைமலை வட்டார பகுதியில் தான் குறுவை மற்றும் சம்பா சாகுபடி நடைபெற்று வருகிறது. நடப்பு சம்பா பருவத்துக்கு விவசாய கூலி ஆட்கள் பற்றாக்குறையை போக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன. மேலும் 750 ஏக்கர் பாசன நிலங்களுக்கு தலா ரூ.1,200 மானியம் வழங்கப்பட உள்ளது.குறைந்த விதை நெல், அதிக தூர்கள், குறைந்த களை, சீரான இடைவெளி, நிறைந்த மகசூல் உள்பட பல்வேறு அம்சங்கள் நிறைந்த எந்திர நடவு முறையை விவசாயிகள் பின்பற்றினால் சம்பா பருவத்தில் அதிக லாபம் பெறலாம். இவ்வாறு அவர் கூறினார்.

## குமரி மாவட்டத்தில் தொடரும் மழை திற்பரப்பு அருவியில் வெள்ளப்பெருக்கு



குமரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக விட்டு, விட்டு மழை பெய்து வருகிறது. நேற்று முன்தினமும் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மழை பெய்தது. நேற்று காலை 6 மணி வரையிலான 24 மணி நேரத்தில் அதிகபட்சமாக சுருளோடு பகுதியில் 76.4 மி.மீ. மழை பதிவாகியது. தொடர் மழையின் காரணமாக பேச்சிப்பாறை அணைக்கு வினாடிக்கு 419 கன அடி தண்ணீர் வருகிறது. பெருஞ்சாணி அணைக்கு 484 கன அடி தண்ணீர் வருகிறது. கடந்த 10 நாட்களாக மூடப்பட்டிருந்த இந்த அணை நேற்று முதல் திறக்கப்பட்டுள்ளது. முக்கடல் அணை நிரம்பியதைத் தொடர்ந்து அணையில் மறுகால் பாய்ந்தோடுகிறது.

சிற்றாறு–1 அணையில் இருந்து உபரி நீர் திறந்து விடப்பட்டதால் திற்பரப்பு அருவியில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது. இதனால், நேற்று அருவியில் குளிக்க சுற்றுலா பயணிகளுக்கு தடை விதிக்கப்பட்டது. மேலும், தாமிரபரணி ஆற்றின் கரையோர பகுதியில் வெள்ள அபாய எச்சரிக்கை விடப்பட்டது.

## கோழிகளில் தீவன எடுப்பு இயல்பை விட அதிகமாக இருக்கும் ஆராய்ச்சி நிலையம் தகவல்




வெப்ப அளவுகள் பெருமளவு குறைந்து கோழிகளில் தீவன எடுப்பு இயல்பை விட அதிகமாக இருக்கும் என ஆராய்ச்சி நிலையம் தெரிவித்து உள்ளது. ஆராய்ச்சி நிலையம்


நாமக்கல் மாவட்டத்தில் இன்று முதல் அடுத்த 3 நாட்களுக்கு நிலவும் வானிலை குறித்து கால்நடை மருத்துவ கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம் சார்பில் வெளியிடப்பட்டு உள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- இன்று முதல் அடுத்த 3 நாட்கள் வானம் பொதுவாக மேக மூட்டத்துடன் காணப்படும். மழை பெய்ய வாய்ப்பு இல்லை. காற்று வேகம் மணிக்கு முறையே 5, 5, 5 கி.மீ. வேகத்தில் தெற்கு திசையில் இருந்து வீசும். வெப்ப நிலையை பொறுத்த வரையில் அதிகபட்சமாக அடுத்த 3 நாட்கள் 91.4 டிகிரியாகவும், குறைந்தபட்சமாக அடுத்த 3 நாட்கள் 73.4 டிகிரியாகவும் இருக்கும். காற்றின் ஈரப்பதம் அதிகபட்சமாக முறையே 80, 78, 75 சதவீதமாகவும், குறைந்தபட்சமாக 68, 65, 60 சதவீதமாகவும் இருக்கும்.

கவனம் தேவை

தென்மேற்கு பருவமழையின் காலம் முடிவுறும் தருவாயில் உள்ளது. இனி வரும் நாட்களில் மழைக்கான வாய்ப்பு குறைவாக காணப்பட்டாலும், கடந்த 15 நாட்களில் பெய்த மழையின் (204 மி.மீ.) காரணமாக வெப்ப அளவுகள் பெருமளவு குறைந்து கோழிகளில் தீவன எடுப்பு இயல்பை விட அதிகமாக உள்ளது.புதிய வரவான மக்காச்சோளம் மற்றும் சோயாப்புண்ணாக்கு ஆகியவற்றில் ஈரப்பதம் 12 முதல் 14 சதவீதம் வரை

இருப்பதால் அவற்றின் சேமிப்பிலும், உபயோகத்திலும் கவனம் தேவை. சில முட்டை கோழிகளின் தீவனத்தில் அதிக அளவு அப்ளா நச்சு காணப்படுவது ஆய்வக பரிசோதனையில் தெரியவந்துள்ளதால் மூலப்பொருட்களை பயன்படுத்துவதில் கவனமும், பூஞ்சை நச்சு முறிவு மருந்துகளை உபயோகப்படுத்துவதும் அவசியம். இவ்வாறு அந்த அறிக்கையில் கூறப்பட்டு உள்ளது.

## கோரையாறு நீர்வீழ்ச்சியில் தண்ணீர் கொட்டுவதால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சி பாதையை சீரமைத்து சுற்றுலா தலமாக்க பொதுமக்கள் கோரிக்கை



வேப்பந்தட்டையை அடுத்துள்ள கோரையாறு நீர்வீழ்ச்சியில் தண்ணீர் கொட்டுவதால் சுற்றுலா பயணிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். பாதையை சீரமைத்து சுற்றுலா தலமாக்க வேண்டும் என பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கோரையாறு நீர்வீழ்ச்சி

பெரம்பலூர் மாவட்டம் வேப்பந்தட்டை அடுத்து கோரையாறு கிராமம் உள்ளது. இந்த கிராமத்தில் இருந்து சுமார் 3 கிலோ மீட்டர் தூரத்தில்

கோரையாறு பச்சமலை நீர்வீழ்ச்சி உள்ளது. இந்த நீர் வீழ்ச்சியில் மலை உச்சியிலிருந்து தண்ணீர் கொட்டும் இடத்தில் அகண்ட பரப்பளவில் கிணறு போன்று 60 அடி ஆழம் கொண்ட நீர் தேக்கம் உள்ளது. நீர் தேக்கத்திலிருந்து தண்ணீர் வெளியேறும் இடத்தில் நீச்சல் தெரியாதவர்கள் குளித்து மகிழலாம். ஆனால் நீர்வீழ்ச்சியில் குளித்து மகிழ வேண்டும் என்றால் கண்டிப்பாக நீச்சல் தெரிந்திருக்க வேண்டும். தண்ணீர் கொட்டுகிறதுதற்போது பருவ மழை பெய்து வருவதால் பச்சமலை உச்சியிலிருந்து உருண்டோடி வரும் தண்ணீர் சுமார் 100 அடி உயரத்திலிருந்து கோரையாறு அருவியில் வெள்ளியாய் கொட்டும் காட்சி சுற்றுலா பயணிகளை ஆனந்தத்தில் மிதக்க செய்கிறது. ஆனால் கோரையாறு கிராமத்திலிருந்து மலைமீது 3 கிலோமீட்டர் தூரம் நடந்து செல்லும் பாதை கரடு முரடாக உள்ளதால், இங்கு வரும் சுற்றுலா பயணிகள் மிகுந்த சிரமம் அடைகின்றனர். இந்த சிரமங்களையும் பொருட்படுத்தாமல் சேலம், பெரம்பலூர் மற்றும் திருச்சி மாவட்டங்களிலிருந்து தினசரி ஏராளமான சுற்றுலா பயணிகள் வந்த வண்ணம் உள்ளனர்.பாதையை சீரமைக்க கோரிக்கை

மழைபெய்யும் காலங்களிலும், அக்டோபர் மாதம் முதல் ஜனவரி மாதம் வரையுள்ள குளிர் காலங்களிலும் தண்ணீர் வரக்கூடிய இந்த அருவிக்கு செல்லும் மலைப்பாதையை சீரமைக்க வேண்டும் எனவும், இந்த பகுதியை சுற்றுலா தலமாக்க மாவட்ட நிர்வாகம் நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும், அருவிக்கு வரும் சுற்றுலாப்பயணிகளும், பொதுமக்களும் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## கோவில்பட்டியில் பலத்த மழை



கோவில்பட்டி,

கோவில்பட்டி பகுதியில் நேற்று முன்தினம் இரவு 11 மணியளவில் பலத்த மழை பெய்தது. சுமார் 20 நிமிடம் நீடித்த மழையால் சாலைகள், தெருக்களில் தண்ணீர் தேங்கியது. கோவில்பட்டியில் 35 மில்லி மீட்டர், கடம்பூரில் 30 மி.மீ., கழுகுமலையில் 15 மி.மீ., கயத்தாறில் 2 மி.மீ. மழை பதிவானது.

கோவில்பட்டி இளையரசனேந்தல் ரெயில்வே கேட் சுரங்க வழிப்பாதையில் சுமார் 2½ அடி உயரத்துக்கு மழை நீர் தேங்கியது. அங்கிருந்து தண்ணீரை வெளியேற்றும் மோட்டார் பழுதடைந்ததால், வாகனங்கள் தண்ணீரில் தத்தளித்தபடி சென்றன. தொடர்ந்து மோட்டாரை சரி செய்து, தண்ணீரை அகற்றும் பணியில் நகராட்சி பணியாளர்கள் ஈடுபட்டனர்.

**தொடர் மழை எதிரொலி மணப்பாறை பகுதியில் நாற்று நடும் பணி தீவிரம்**



தொடர் மழை எதிரொலியாக மணப்பாறை பகுதியில் நாற்று நடும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

தொடர் மழை

தமிழகத்தில் வெப்பசலனம் காரணமாக ஆங்காங்கே தற்போது, பரவலாக மழை பெய்து வருகிறது. திருச்சி மாவட்டம், மணப்பாறை மற்றும் சுற்றுவட்டாரப் பகுதிகளில் கடந்த சில தினங்களாக தொடர் மழை பெய்து வருகிறது. இவ்வாறு தொடர்ந்து மழை பெய்து வருவதால் இந்த ஆண்டு புரட்டாசி மாத நடவு சிறப்பாக இருக்கும் என்று எதிர்பார்த்து விவசாயிகள் தற்போது விவசாயப் பணிகளை துவங்கி உள்ளனர்.

விவசாய நிலங்களை சரிசெய்து அவற்றில் உழவு ஓட்டி, பார்கட்டி நடவுக்கு தயார் செய்து வருகின்றனர். சிலர் நாற்று நடும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். தற்போது பெய்கின்ற மழை தொடர்ந்து பெய்தால் மட்டுமே விவசாயம் செழிப்பாக இருக்கும் என்றும் விவசாயிகள் கருத்து தெரிவித்து உள்ளனர். விவசாய பணிகள் தீவிரம்

வறட்சியின் காரணமாக கடந்த சில ஆண்டுகளாக நீர் இருக்கும் பகுதியில் மட்டுமே விவசாயம் செய்து வந்தனர். ஆனால் தற்போது, மழை பெய்து வருவதால் பெரும்பாலான இடங்களில் விவசாய பணிகளை தொடங்கி உள்ளனர். மேலும் இந்த மழை தொடர்ந்து பெய்யுமா? பெய்யாதா? என்ற சந்தேகத்தில் சில விவசாயிகள் வரும் காலங்களில் வறட்சியை தாங்கி வளரும் மரங்களை நடும் பணியில் தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். விவசாய நிலங்கள் இருந்தும், போதுமான நீர் இல்லாமல் விவசாயத்தை விட்டு விட்டு வெளிஊருக்கு வேலைக்கு சென்றவர்கள் தற்போது பெய்துள்ள மழையை வைத்து மீண்டும் விவசாயப்பணிகளை தொடங்கி உள்ளனர். இதனால் மணப்பாறைபகுதியில் எங்கு பார்த்தாலும் விவசாய பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகிறது. விவசாய தொழிலாளர்களுக்கு வேலைவாய்ப்பும் அதிகரித்துள்ளது.

## தொடர்மழையால் நிரம்பி வரும் ஏரிகள் விவசாயிகள் மகிழ்ச்சி



மூங்கில்துறைப்பட்டு

தொடர்ந்து பெய்து வரும் மழை காரணமாக மூங்கில்துறைப்பட்டு பகுதியில் உள்ள ஏரிகள் நிரம்பி வருகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

மழை

வெப்ப சலனம் காரணமாக கல்வராயன்மலை, மூங்கில்துறைப்பட்டு மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் கடந்த சில நாட்களாக பரவலாக மழை பெய்து வருகிறது. இதனால் ஆறு மற்றும் வாய்க்கால்களில் மழை

நீர் பெருக்கெடுத்து ஓடுகிறது. இதன் காரணமாக கிராம புறங்களில் உள்ள ஏரி, குளங்கள் வேகமாக நிரம்பி வருகிறது. அதன் படி மூங்கில்துறைப்பட்டு அருகே பாக்கம், புதூர், கடுவனூர், வடபொன்பரப்பி, வடகீரனூர், புதுப்பட்டு, ரங்கப்பனூர், லக்கிநாயக்கன்பட்டி ஆகிய கிராமங்களில் உள்ள ஏரிகள் தற்போது நிரம்பி வழிகிறது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

இது குறித்து விவசாயி ஒருவர் கூறியதாவது:– போதிய மழையின்மை காரணமாக எங்களது பகுதியில் உள்ள ஏரி, குளங்கள் அனைத்தும் கடந்த 2 ஆண்டுகளாக தண்ணீரின்றி வறண்டு கிடந்தது. இதனால் விவசாய பணிகள் கடுமையாக பாதிக்கப்பட்டது. மேலும் குடிநீர் தட்டுப்பாடும் ஏற்பட்டது. இந்தநிலையில் தற்போது பெய்து வரும் மழை காரணமாக மூங்கில்துறைப்பட்டு பகுதியில் உள்ள 8 ஏரிகள் நிரம்பியுள்ளது.

46 ஏரிகள்

இன்னும் ஒரு வாரத்திற்கு தொடர்ந்து மழை பெய்தால், மூங்கில்துறைப்பட்டு பகுதியில் மீதமுள்ள 46 ஏரிகளும் நிரம்பிவிடும். ஏரிகள் நிரம்பி வருவதால் என்னை போன்று விவசாயிகள் பலர் சம்பா நடவு பணிகளில் தற்போது தீவிரமாக ஈடுபட்டு வருகின்றனர். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

தி இந்து
தமிழால் இணைவோம்

## தமிழகத்தில் சூரிய மின் உற்பத்தி என்ஹெச்பிசி திட்டம்

தேசிய நீர்மின் உற்பத்தி நிறுவனம் (என்ஹெச்பிசி) தமிழகத்தில் 50 மெகா வாட் உற்பத்தி செய்யக்கூடிய சூரியமின் உற்பத்தி ஆலையை தொடங்கவுள்ளது. மதுரையில் சுமார் ரூ. 300 கோடி முதலீட்டில் தொடங்கப்படும் இந்த ஆலைக் கான பணிகள் அடுத்த ஆண்டு மார்ச் மாதத்தில் முடிவடையும் வரும் என தெரிவிக்கப்பட் டுள்ளது.

இந்த ஆலையில் உற்பத்தி செய்யப்படும் 50 மெகாவாட் மின்சாரத்தை தமிழகத்திற்கே வழங்க உள்ளதாகவும் அந்நிறு வனம் கூறியுள்ளது.

இது தொடர்பாக தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் மின்பகிர்மான கழகத்தோடு ஒப்பந்தம் போடவுள் ளதாக அந்நிறுவனத்தின் மூத்த அதிகாரி கூறியுள்ளார்.

மாலை மலர்
www.maalaimalar.com
News.Entertainment.Unlimited...

## கொடைக்கானலில் கன மழை: அருவிகளில் திடீர் வெள்ளப்பெருக்கு



கொடைக்கானல், அக். 14–

கொடைக்கானலில் பெய்து வரும் பலத்த மழையால் அருவிகளில் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது.

கொடைக்கானல் பகுதியில் தினசரி மழை பெய்து வருகின்றது. நேற்றும் கன மழை கொட்டி தீர்த்தது. இதன் காரணமாக நகரின் அருகே உள்ள வெள்ளி நீர் வீழ்ச்சி, பியர்சோழா நீர்வீழ்ச்சி, பாம்பார் நீர்வீழ்ச்சி

மூலையாறு நீர் வீழ்ச்சி உட்பட பல்வேறு நீர் வீழ்ச்சிகளில் திடீர் வெள்ளப்பெருக்கு ஏற்பட்டது.

தொடர் மழை காரணமாக கொடைக்கானல் ஏரி நிரம்பி வழிந்த நிலையில் நகருக்கு குடிநீர் வழங்கும் அணைகளுக்கும் நீர் வரத்து அதிகரித்து வருகின்றது.

அதே போல பெரியகுளம் நகருக்கு குடிநீர் வழங்கும் ஏரியின் நீர் மட்டம் உயர்ந்து வருகிறது. நீர் வீழ்ச்சிகளில் இருந்து அதிக வெள்ளம் செல்வதின் காரணமாக தரைப்பகுதியில் உள்ள பல்வேறு அணைகளிலும் நீர் மட்டம் அதிகரித்து வருவது குறிப்பிடத்தக்கதாகும்.

தொடர் மழையால் உருளை கிழங்கு, காலிபிளவர், பீன்ஸ் செடிகள் அழுகிய வண்ணம் உள்ளது. இதனால் விவசாயிகள் கவலையடைந்துள்ளனர்.

## நீர்ப்பிடிப்பு பகுதியில் கனமழை: பெரியாறு அணைக்கு நீர் வரத்து அதிகரிப்பு



கம்பம், அக்.14–

தேனி அருகே கேரள எல்லைப்பகுதியான தேக்கடியில் முல்லைப்பெரியாறு அணை உள்ளது. இந்த அணை மூலம் தேனி,

திண்டுக்கல், மதுரை, ராமநாதபுரம், சிவகங்கை ஆகிய 5 மாவட்டத்தில் உள்ள விளை நிலங்கள் பாசன வசதி பெறுகின்றன.

தற்போது தொடர்ந்து மழை பெய்துவருவதால் அணைக்கு நீர்வரத்து அதிகரித்த வண்ணம் உள்ளது. நேற்றும் நீர்பிடிப்பு பகுதியில் விடிய விடிய கன மழை நீடித்தது. இன்று காலை 8 மணி நிலவரப்படி அணையின் நீர்மட்டம் 118 அடியாக உள்ளது. நேற்று அணைக்கு 720 கன அடி நீர் வந்தது. இன்று 1544 கனஅடிநீர் வருகிறது. அணையில் இருந்து 511 கனஅடி நீர்திறந்து விடப்படுகிறது.

பெரியாறு அணை நீர் பாசனத்திற்கு போக வைகை அணைக்கு வந்து சேறுகிறது. இதனால் அணையின் நீர்மட்டம் கனிசமாக உயர்ந்து வருகிறது.

மூலவைகையில் தற்போது மழை பெய்து வருவதால் அணைக்கு 500 கன அடி நீர் வருகிறது. மதுரை மாநகர் குடிநீருக்காக 60 கன அடி நீர் திறந்து விடப்படுகிறது. அணையின் நீர்மட்டம் 48.46 அடியாக உள்ளது.

சோத்துப்பாறை அணை நீர்மட்டம் 106.60அடியாக உள்ளது. அணைக்கு 110 கன அடி நீர் வருகிறது. 3 கன அடி நீர் திறந்து விடப்படுகிறது.

மஞ்சளாறு அணையின் நீர் மட்டம் அதன் முழு கொள்ளளவை எட்டி விட்டது. எனவே பாதுகாப்பு கருதி அணைக்கு வரும் 294 கன அடி நீர் அப்படியே வெளியேற்றப்படுகிறது. நீர்மட்டம் 56.80 அடியாக உள்ளது.

மழை அளவு விவரம் மி.மீட்டரில் வருமாறு:–

பெரியாறு அணை– 0.8,உத்தமபாளையம் 1.6, வீரபாண்டி–10, வைகைஅணை– 18.6, மஞ்சளாறு–28, மருதாநதி–3, சோத்துப்பாறை அணை–46, கொடைக்கானல்–19.

**தென்தமிழகத்தில் இன்று மழை பெய்யும்: வானிலை ஆய்வு மையம் தகவல்**




சென்னை, அக்.14- தமிழகத்தில் இந்த மாதம் தொடக்கத்தில் இருந்தே அனைத்து பகுதிகளிலும் பரவலாக நல்ல மழை பெய்து வருகிறது. இந்த நிலையில், அடுத்த 24 மணி நேரத்தில் (இன்று) தென்தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், வடதமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் மழை பெய்யும் என்று சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து சென்னை வானிலை ஆய்வு மைய அதிகாரி ஒருவர் கூறியதாவது:-

வெப்பச்சலனம் காரணமாக தமிழகத்தில் கடந்த சில நாட்களாக மழை பெய்து வருகிறது. அடுத்த 24 மணி நேரத்தை பொறுத்தவரையில் (இன்று), குமரிக்கடல் பகுதியில் ஏற்பட்டுள்ள மேலடுக்கு சுழற்சி மற்றும் வெப்பச்சலனம் காரணமாக தென் தமிழகத்தில் ஒரு சில இடங்களிலும், வடதமிழகத்தில் ஓரிரு இடங்களிலும் மழை பெய்யும். சென்னையை பொறுத்தவரையில், வானம் லேசான மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் சில பகுதிகளில் ஆங்காங்கே மாலை அல்லது இரவு நேரங்களில் மழை பெய்ய வாய்ப்பு இருக்கிறது.இவ்வாறு அவர் கூறினார்.

## இயற்கையோடு ஒன்றி வாழ்ந்தால் உண்டு நன்மை!

'இயற்கை வேளாண்மை மற்றும் பாதுகாப்பான உணவு' குறித்த கருத்தரங்கம் நாகை மாவட்டம் சீர்காழியில் நடைபெற்றது . இந்தக் கருத்தரங்கத்தை 'நலம் பாரம்பரிய விவசாய அறக்கட்டளை மற்றும் நமது நெல்லை காப்போம்' இயக்கம் இணைந்து நடத்தியது. பெண்கள் 100 பேர் உட்பட 300 பேர் கலந்து கொண்டனர். "ரசாயன உரத்தையும் பூச்சிக்கொல்லியையும் அதிகமாகப் பயன்படுத்தி வருவதால், பயிர்கள் நச்சுத்தன்மை அடைகிறது. ஒரு காலத்தில் சர்க்கரை வியாதி 50 வயதுக்கு மேல்தான் வந்தது. ஆனால் இன்று 30 வயதிலேயே சர்க்கரை நோய் வருகிறது. அதுக்கு முக்கிய காரணம் பேசிக் ப்ளோரா ( Basic flora) என்று சொல்லக்கூடிய தாவரங்கள் விஷத்தன்மை அடைந்ததுதான்" என்று மருத்துவர் முத்துக்குமார் பேசினார்.



'நலம் தரும் இயற்கை வேளாண் விளை பொருட்கள்' என்ற நூலை இராமகிருஷ்ணன் வெளியிட்டார். கருத்ததரங்கில் பங்கேற்ற அனைவருக்கும் இப்புத்தகம் இலவசமாக வழங்கப்பட்டது. விழாவில் அனைவருக்கும் அவல்,முளை கட்டிய பயிர்கள், தினைப் பாயாசம் ஆகியவை வழங்கப்பட்டன. "நேற்றைய மனுஷன் வெசத்தை தொட்டான் கெட்டான், இன்னைய மனுஷன் வெசத்ததான்

சாப்பிடுறான். பூச்சிக்கொல்லி இல்லாம நாம அரிசி சோறு சாப்பிடுறது இல்ல. இயற்கை முறையில விளைவிக்குற அரிசி 3 மாசத்துக்கு மேல வச்சிருந்தாலே புழு வந்துடும். ஆனா கடைல பைல விக்குற அரிசி 2 வருசம் ஆனாலும் ஒண்ணுமே ஆகாது . அதுக்கு காரணம் அரிசி பைகள் பேக்கிங் செய்யும் போது பூச்சிக் கொல்லியை ஸ்ப்ரே செய்கின்றனர்" என்று இயற்க்கை விவசாயி வீராசாமி பேசினார்.

தொடர்ந்து பேசிய அண்ணாமலை பல்கலைக்கழக உழவியல் துறை பேராசிரியர் இமயவரம்பன், "இயற்கை வேளாண்மையை உலகுக்கு அறிமுகப்படுத்தியவர்கள் இந்தியர்கள்தான். உலகில் உள்ள பல நாடுகள் நம்மை பார்த்து ஆச்சர்யப்பட்ட விசயம் நம் பின்பற்றி வந்த பாரம்பரியம்தான். அந்தப் பாரம்பரியமான வேளாண்மை எப்பா◌ேது மாறியது என்றால், நம் முன்னா◌ேர்கள் விவசாயத்தை வியாபாரமாக பார்க்கவில்லை . வாழ்வியல் கலையாகத்தான் பார்த்தார்கள் என்று வியாபார நோக்கத்தில் மாறினார்களோ அன்றுதான் நம் பாரம்பரிய வேளாண்மையில் இருந்து மாறி உரங்களையும் பூச்சிக்கொல்லியையும் பயன்படுத்த ஆரம்பித்தனர். இயற்கை வேளாண்மை செய்யும் போது மட்டும்தான் நீடித்த சுற்றுச்சூழல் இருக்கும் , நீடித்த வலிமை மண்ணுக்கு இருக்கும், நீடித்த பொருளாதாரம் இருக்கும், நீடித்த உடல் ஆரா◌ேக்கியத்துடன் வாழ முடியும்.



நாம் செய்ய வேண்டியது என்ன வென்றால் வழக்கத்த விட்டு மாறா செஞ்சத கைவிட்டு திரும்ப நம் முன்னோர்கள் பின்பற்றியதை வழக்கத்துக்கு கொண்டு வரணும். இயற்கையோடு ஒன்றி வாழ்ந்தால் இயற்கை என்றுமே நம்மை கைவிடாது" என்றார்.

கருத்தரங்கில் இயற்கை முறையில் விளைந்த விதைகள், விவசாயிகளுக்கு இலவசமாக வழங்கப்பட்டது. இயற்கை பூச்சிக் கொல்லிகள், அரிசி, தினை மாவு, கேழ்வரகு மாவு, எண்ணெய், புத்தகங்கள் ஆகியவை இடம்பெற்றருந்தன. முடிவில் அனைவருக்கும் இலவசமாக மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. இயற்கையோடு இணைவோம்... நலமாக வாழ்வோம்!

தினகரன்

**வேளாண் பொறியியல் துறையில் காவலர் பணியிடங்களுக்கு விண்ணப்பங்கள் வரவேற்பு**

கோவை, : கோவை வேளாண் பொறியியல் துறையின் செயற்பொறியாளர் வெளியிட்ட அறிக்கை: கோவை மாவட்டம் வேளாண்மை பொறியியல் துறை கட்டுப்பாட்டில் அரசு தரப்பில் காலியாக உள்ள (ஊதிய விகிதம் ரூ.4800-10,000+ தர ஊதியம் 1300) காவலர் பணியிடத்திற்கு இனசுழற்சி அடிப்படையில் பணி நியமனம் செய்யப்படவுள்ளதால், தகுதியுள்ள நபர்களிடம் இருந்து விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. அதன்படி வெள்ளைத்தாளில் விண்ணப்பம் உரிய கல்வித்தகுதி மற்றும் புகைப்படம், அடையாளச் சான்று, சாதிச்சான்றிதழ், பிறந்த தேதி சான்று ஆகியவற்றின் சான்றொப்பம் இட்ட நகல்களுடன் வரும் 26ம் தேதிக்குள் செயற்பொறியாளர், வேளாண்மை பொறியியல் துறை, ஜி.சி.டி தடாகம் சாலை கோவை-13 என்ற முகவரிக்கு அனுப்பவேண்டும். தகுதியுள்ள விண்ணப்பதாரர்க்கு நேர்முகத்தேர்வுக்கு நடக்கும் இடம் மற்றும் தேதி குறித்து தனி கடிதம் அனுப்பி வைக்கப்படும். மேலும், இன சுழற்சி முறையில் இதர வகுப்பினர் 1, பிற்படுத்தப்பட்ே◌டார் வகுப்பினர் 1, பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் 1 மற்றும் தாழ்த்தப்பட்ட வகுப்பினர் 1 என்ற சுழற்சி முறையில் 4 பணியிடங்கள் நிரப்பப்படவுள்ளது. குறைந்தப்பட்ச தகுதி தமிழில் நன்றாக எழுத, படிக்க தெரிந்திருக்க வேண்டும். இவ்வாறு, அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மாவட்டத்தில் 28மி.மீ மழை பதிவு**

கோவை, : வடகிழக்கு பருவமழை தொடங்க இன்னும் எழு நாட்கள் மட்டுமே உள்ள நிலையில் வெப்ப சலனம் காரணமாக கோவை மாவட்டத்தில் நேற்று முன்தினம் கனமழை பெய்தது. கவுண்டம்பாளையம், தொண்டாமுத்தூர், உக்கடம், ராமநாதபுரம், வடவள்ளி, பீளமேடு, அன்னூர் உள்ளிட்ட பல்வேறு பகுதிகளில் ே◌நற்று முன்தினம் இரவு பெய்த மழை விடிய விடிய நீடித்தது. பல இடங்களில்

இடியுடன் கூடிய மழை பெய்தது. தொடர்ந்து பெய்த மழையினால் சாலைகளில் தண்ணீர் தேங்கி கிடந்தது. நேற்று காலையில் சில இடங்களில் மட்டும் சாரல் மழை பெய்தது. வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. நேற்று முன்தினம் பெய்த மழையின் படி அன்னூரில் 44 மி.மீ, பீளமேடு 44.20மி.மீ, மேட்டுப்பாளையம் 10 மி.மீ, பொள்ளாச்சி 8மி.மீ, பெரியநாயக்கன்பாளையத்தில் 12மி.மீ, சூலூரில் அதிகபட்சமாக 44.20மி.மீ, வேளாண் பல்கலையில் 26.40மி.மீ, சின்கோனா 27மி.மீ, சின்னகல்லார் 24மி.மீ, ே◌காவை தெற்கு 25மி.மீ, வால்பாறை தாலுக்கா அலுவலகம் 56மி.மீ, வால்பாறையில் 26 மி.மீ என மொத்தம் 347.20 மி.மீ மழை பதிவாகியுள்ளது. அதாவது மாவட்டத்தில் சராசரியாக மொத்தம் 28.93 மி.மீ மழை பதிவாகியுள்ளது. தொடர்ந்து அடுத்த இரண்டு நாட்களுக்கும் இரவு நேரங்களில் கன மழை பெய்ய வாய்ப்பு உள்ளதாக காலநிலை ஆராய்ச்சியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

**கரூரில் 16ம்தேதி விவசாயிகள் குறைதீர் கூட்டம்**

கரூர், : மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 16ம்தேதி காலை 11 மணிக்கு கரூர் கலெக்டர் அலுவலகத்தில் நடைபெறுகிறது. கரூர் மாவட்ட விவசாயிகள், விவசாய சங்க உறுப்பினர்கள் அனைவரும் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலந்துகொள்ளலாம். விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த மனுக்கள் மட்டும் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். இத்தகவலை கலெக்டர் ஜெயந்தி தெரிவித்துள்ளார்.

**பசுந்தேயிலைக்கு மீண்டும் குறைந்த மாத விலை நிர்ணயம்**

மஞ்சூர், : மாவட்ட கூட்டுறவு தேயிலை தொழிற் சாலைகளில் பசுந்தேயிலைக்கு மீண்டும் குறைவாக மாத விலை நிர்ணயம் செய்யப்பட்டதால் விவசாயிகள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர். நீலகிரி மாவட்டத்தில் சுமார் 65 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சிறு, குறு விவசாயிகள் தேயிலை தொழிலில் ஈடுபட்டு வருகிறார்கள். இதை

முன்னிட்டு 15 கூட்டுறவு ஆலைகளும் நூற்றுக்கும் மேற்பட்ட தனியார் ஆலைகளும் மாவட்டத்தில் இயங்கி வருகிறது. இதில் கூட்டுறவு ஆலைகளில் மட்டும் சுமார் 22 ஆயிரத்திற்கும் மேற்பட்ட விவசாயிகள் உறுப்பினர்களாக உள்ளனர். இவர்களிடம் இருந்து தினசரி கொள்முதல் செய்யப்படும் பசுந்தேயிலைக்கு மாதம் ஒரு முறை இண்ட்கோ சர்வ் நிறுவனத்தின் மூலம் விலை நிர்ணயம் செய்யப்படுகிறது. இதை தொடர்ந்து சம்மந்தப்பட்ட கூட்டுறவு ஆலைகள் மூலம் விவசாயிகளுக்கு பசுந்தேயிலைக்கான தொகை வழங்கப்படுகிறது. இந்நிலையில், கடந்த செப்டம்பர் மாதம் விவசாயிகளிடம் இருந்து கூட்டுறவு ஆலைகள் கொள்முதல் செய்த பசுந்தேயிலைக்கு மாத விலை நிர்ணயம் செய்வதற்கான அதிகாரிகள் கூட்டம் குன்னூர் இண்ட்கோ சர்வ் அலுவலகத்தில் நடந்தது. இக்கூட்டத்தில் கடந்த மாதத்திற்கான மாத விலை நிர்ணயம் செய்து அறிவிக்கப்பட்டது. இதன்படி கூடலூர் சாலீஸ்பரி மற்றும் பந்தலூர் கூட்டுறவு ஆலைகளில் பசுந்தேயிலை கிலோ ரூ.6.50 மற்றும் கூடுதல் விலை 2 ரூபாயுடன் சேர்த்து ரூ.8.50 ஆகவும், மஞ்சூர், கைகாட்டி, பிரான்டியர், பிதர்காடு ஆகிய தொழிற்சாலைகளில் ரூ.6 மற்றும் கூடுதல் விலை ரூ.2 சேர்த்து கிலோ ரூ.8 எனவும், பிக்கட்டி கூட்டுறவு ஆலையில் ரூ.5.50 கூடுதல் விலை 2 ரூபாய் சேர்த்து ரூ.7.50 ஆகவும், குந்தா(எடக்காடு), கரும்பாலம், மேற்குநாடு, மகாலிங்கா, இத்தலார், கிண்ணக்கொரை, எப்பநாடு ஆகிய தொழிற்சாலைகளில் ரூ.5 மற்றும் கூடுதல் விலை 2 ரூபாய் சேர்த்து ரூ.7 ஆகவும், மாத விலை நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. கடந்த சில மாதங்களாகவே கூட்டுறவு தேயிலை தொழிற்சாலைகளில் பசுந்தேயிலைக்கு வழங்கப்படும் மாத விலை படிப்படியாக குறைந்து வருவது விவசாயிகள் மத்தியில் பெரிதும் அதிருப்தியையும், கவலையையும் ஏற்படுத்தியுள்ளது.

**அறுவடை செய்த குறுவை நெல்லுடன் கொள்முதல் நிலையத்தில் காத்து கிடக்கும் விவசாயிகள்**

திருக்காட்டுப்பள்ளி, : திருக்காட்டுப்பள்ளி அடுத்த அலமேலுபுரம் பூண்டியில் அறுவடை செய்யப்பட்ட குறுவை நெல்லை கொள்முதல் செய்யாததால் கொள்முதல் நிலையம் அருகே விவசாயிகள் காத்து கிடக்கின்றனர். திருக்காட்டுப்பள்ளி அடுத்த அலமேலுபுரம் பூண்டி பகுதியில் பம்ப்செட்டு மூலம் நாற்றுவிட்டு பல்வேறு இன்னல்களுக்கு இடையே விவசாயிகள் குறுவை நெல் சாகுபடி செய்தனர். அறுவடை செய்யப்பட்ட நெல்லை அரசு நெல் கொள்முதல் நிலையத்துக்கு கொண்டு வந்தால் அதை உடனடியாக எடுத்து கொள்ளாமல் காலம் தாழ்த்தப்படுகிறது. இதனால் விவசாயிகள் பாடுபட்டு விளைவித்த நெல்லை சாலையோரம் கொட்டி வைத்துள்ளனர். கடந்த சில நாட்களாக மழை தொடர்ந்து பெய்து வருவதால் தெருவில் கொட்டப்பட்டு கிடக்கும் நெல் முளைக்கும் அபாயத்தில் உள்ளது. எனவே அப்பகுதியில் தேங்கி கிடக்கும் நெல் மூட்டைகளை உடனடியாக கொள்முதல் செய்ய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென விவசாயிகள் கோரிக்கை விடுத்துள்ளனர்.